உ

சிவமயம்

கல்லடி

# இலட்சுமிப்பிள்ளை மயில்வாகனம்

அவர்களின்

# நினைவு மலர்

✝

*In Memory of the Late*

# Mrs. L. MYLVAGANAM

Rtd. Teacher

**MUNAIKADDU - BATTICALOA**

★

21-1-2008



**அமரர் திருமதி இலட்சுமிப்பிள்ளை மயில்வாகனம்**

**மலர்வு : 13.08.1922** **உதிர்வு : 01.02.2007**

எண்பத்து நாலாண்டு அவனியில் உறைந்து
எண்ணற்ற இதயத்தில் குடிகொண்டு வாழும்
பெண்தெய்வம் பாதார விந்தங்கள் தன்னில் - எம்
எண்ணங்கள் பலவும் அர்ப்பணம் ஆகட்டும்

# கடவுள் வணக்கம்

அத்தி முகவனை நித்த நினைபவர்
சித்த மகிழ்வொடு முத்தி பெறுவரே.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

பிறவா திருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காண் இது வெப்படியோ
அறமார் புகழ் தில்லை யம்பல வாண ரடிக்கமல
மறவா திரு மனமே யதுகாண் மருந்து னக்கே

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின்னஞ் செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே.

# *Our Lord* ***Jesus Christ***

## Mark 4

30. And he said, "What does the Kingdom of God resemble? And by what parable shall we relate it?
31. "It is like a mustard seed, which when sown in the soil, is the smallest of all the plants on earth,
32. "And when it is sown, it climbs and becomes bigger than all the vegetables, and it makes a great number of branches, so that it is possible for birds to make their nests in its shade."

## Mark 7

14. And Jesus called all the crowd and told them, "Listen to me all of you and learn.
15. "There is nothing outside of a human being that enters him, which can degrade him. Except, what comes out of him, that is what degrades a human being.
16. "Whoever has ears that hear, listen."



# Highlights of the events in the life of Mrs Letchumipillai Mylvaganam

## திருமதி இலட்சுமிப்பிள்ளை மயில்வாகனம் அவர்களின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுக் குறிப்புகள்

| காலம் / Period | நிகழ்வுகள் | Events |
|---|---|---|
| 13 August 1922 | சீனிவாசகம்-சின்னமுத்து தம்பதியின் ஐந்தாவது குழந்தையாக முனைக்காட்டில் பிறந்தார் | Born as the fifth child to Mr.Seenivasagam & Sinnamuthu in Munaikadu |
| Upto 1938 | ஆரம்பக் கல்வியை முனைக்காடு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் 6ம் வகுப்பு வரை பயின்றார் | Primary Education till Standard 6 at Methodist mission School, Munaikadu |
| 1939- 1944 | 7ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை கல்முனை GBS பாடசாலையில் கற்றார் | Secondary education at Girls Boarding School Kalmunai<br>(From Standard 7 to Standard 10) |
| 1940 | மெதடிஸ்த ஆலயத்தில் ஞானஸ்நானம் பெற்று கிறஸ்தவரானார் | Was Baptized at the Methodist Church and became a Christian |

| காலம் / Period | நிகழ்வுகள் | Events |
|---|---|---|
| 1945- 1947 | மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் தமிழ் ஆசிரியப் பயிற்சி பெற்றார் | Underwent training at Teachers Training Collage, Batticaloa to become a Tamil Trained Teacher |
| 8 April 1947 | முனைக்காட்டில் தந்தையார் திரு சீனிவாசம் அவர்களின் மறைவு | Demise of Mr Seenivasagam- her father in Munnaikadu |
| August 1947 | பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியையாக சித்தியெய்தி, முனைக்காடு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் ஆசிரியையாகப் பதவி ஏற்றார் | Qualified as a Tamil trained Teacher and was appointed as a Teacher at Munaikadu Methodist Mission school |
| 2 July 1951 | திரு. தர்மலிங்கம் மயில்வாகனம் (அட்வகேட்) அவர்களை மட்டக்களப்பில் மணமுடித்தார் | Married Mr. Tharmalingam Mylvaganam (Advocate) in |
| 18 June 1952 | மூத்த மகன் சாந்திகுமாரின் ஜனனம் | Birth of the eldest son, Shantikumar at 84, Trinco Road, Batticaloa |
| 1954 ? | அரசடி பாடசாலைக்கு மாற்றலாகி வந்தார் | Was transferred to Arasady School |

| காலம் / Period | நிகழ்வுகள் | Events |
|---|---|---|
| 27 November 1954 | இரண்டாம் புதல்வன் ரவிவர்மனின் ஜனனம் | Birth of the second son Ravivarman at 84, Trinco Road, Batticaloa |
| 07 February 1957 | மூன்றாவது புதல்வன் யோகஸ்வரனின் ஜனனம் | Birth of the third the son, Yogeswaran at 84, Trinco Road, Batticaloa |
| 12 May 1961 | நான்காவது புதல்வன் சுரேந்திரனின் ஜனனம் | Birth of the fourth son, Surendran at 84, Trinco Road, Batticaloa |
| 11 January 1963 | கடைசி மகன் சத்தியேந்திராவின் ஜனனம் | Birth of the youngest son Sathyendra at 84, Trinco Road, Batticaloa |
| 17 March 1965 | கல்லடியில் கட்டிய புது வீட்டில் குடிபுகுந்தார் | House warming ceremony of the new house built in New Kalmunai Road, Kallady |
| 01 October 1967 | வின்சன்ட் மகளிர் பாடசாலைக்கு மாற்றம் | Tranferred to Vincents' Girls High School |

| காலம் / Period | நிகழ்வுகள் | Events |
|---|---|---|
| September 1969 | மூத்த சகோதரர் பூபாலப்பிள்ளையின் மறைவு | Demise of her elder brother Poopalapillai |
| January 1972 | மூத்த மகன் பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டு கட்டுப்பெத்தை பல்கலைக் கழகம் புகுந்தது | The eldest son entered the University at Engineering Faculty, Katubedda Campus |
| December 1973 | முதல் வெளிநாட்டுப் பயணம்- ரோட்டரி கிளப் நிகழ்ச்சிக்காக கணவருடன் இந்தியா சென்றார் | First foreign trip to India- Joined her husband to attend a Rotary Club function. |
| 26 December 1974 | 56 வயதில் கணவர் மாரடைப்பு காரணமாக மறைவு | Demise of her husband due to a heart attack at the age of 56 |
| 15 January 1975 | கல்லடி அரசினர் பாடசாலைக்கு மாற்றம் பெற்றார் | Transferred to Kallady Government Primary School |
| 12 October 1976 | மூத்த மகன் பொறியியலாளராக சித்தியடைந்தது | Eldest son qualified as a Civil Engineer |
| 10 October 1976 | இரண்டாம் மகன் மேல் படிப்புக்காக இங்கிலாந்து பயணம் | Second son left for England for higher studies |

| காலம் / Period | நிகழ்வுகள் | Events |
|---|---|---|
| 1979 | மூன்றாவது மகன் குண்டசாலை விவசாயக் கல்லூரியில் சேர்ந்தது | Third son entered Kundasale Agricultural College |
| April 1980 | கணவர் அஸ்தியைக் கரைப்பதற்காக இந்தியப் பயணம் | Trip to India to desquith the ashes of her husband |
| August 1980 | ஆசிரியைத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றார். | Retired from the teaching profession |
| 30 January 1982 | மூத்த மகனுக்கும் லேடி மனிங் வீதியைச் சேர்ந்த மிருணாளினி மனோஹராவுக்கும் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் திருமணம் | Marriage of the eldest son to Mrinalini Manohara of Lady Manning Drive Batticaloa, at Mamangeswarar Temple, Batticaloa |
| 24 June 1982 | கட்டுக்குடிப்பட்டியில் நடைபெற்ற சிவகுமார்-மணிமொழி திருமணத்திற்காக இந்தியா சென்றார் | Travelled to India to attend the wedding of Sivakumar & Manimozhi at Kattukudipatti |
| August 1983 | நான்காம் மகன் கிழக்குப் பல்கலைக் கழகத் | Fourth son entered Science Faculty of the Eastern |

| காலம் / Period | நிகழ்வுகள் | Events |
| --- | --- | --- |
| | விஞ்ஞான பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார் | University, Vantharumoolai Campus |
| January 1985 | கடைசி மகன் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப் பட்டார் | Youngest son entered the Engineering Faculty of the Peradeniya Campus |
| December 1984 | முதல் பேத்தி கற்பகத்தின் பிறப்பின் நிமித்தம் ஸாம்பியா பயணம் | Travelled to Zambia for the birth of the eldest daughter Katpaham |
| 13 August 1986 | ஸ்ரான்லி இல்லத்தில் கணவரின் தாயாரின் மறைவு | Demise of her mother-in-law at Stanley House, Lady, Manning Drive, Batticaloa. |
| 1 October1986 | கல்லடி இசை நடனக் கல்லூரியில் நடந்த நான்காம் மகனுடைய பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டார். | Attended the graduation ceremony of her third son at the Kallady Music College. |
| October 1986 | கல்லடி இல்லத்தில் தாயார் திருமதி சின்னமுத்து சீனிவாசகத்தின் மறைவு | Demise of her mother Mrs Sinnamuthu Seenivasagam at the Kallady residence |
| 12 May 1988 | மூன்றாம் மகனுக்கும் தம்பிலுவிலைச் சேர்ந்த இந்துமதி செல்லப்பாவுக்கும் | Third son married Indumathy Chellappa of Thambiluvil at the brides |

| காலம் / Period | நிகழ்வுகள் | Events |
|---|---|---|
| | மணமகள் இல்லத்தில் திருமணம் | residence in Thambiluvil |
| December 1991 | பேராதனைப் பல்கலைகழகத்தில் நடந்த கடைசி மகனுடைய பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டார். | Attended the graduation ceremony of her youngest son at University of Peradeniya. |
| 14 March 1994 | கடைசி மகனுக்கும் காரைதீவைச் சேர்ந்த எழில்றஜனி காசிப்பிள்ளைக்கும் கொழும்பு சஸக்காவா மண்டபத்தில் திருமணம் | Youngest son married Ellilrajni Kasipillai of Karaithivu in Sasakawa Hall, Colombo |
| August 1995 | சிங்கப்பூருக்கும் பிலிப்பைன் தீவுக்கும் இரண்டாம் மகனோடு பயணம் | Visit to Singapore and Philippines accompanied by the second son |
| January 1996 | சிங்கப்பூர் ஊடாக முதல் தென்னாபிரிக்கப் பயணம் | First trip to South Africa via Singapore |

| காலம் / Period | நிகழ்வுகள் | Events |
|---|---|---|
| 4 April 1996 | நான்காவது மகனுக்கும் பாண்டிருப்பைச் சேர்ந்த ரதிமலர்செபமாலைக்கும் இங்கிலாந்து, லெஸ்டரில் திருமணம் | Fourth son married Rathymalar Sebamalai of Padirupu in Leicester, England. |
| 3 November 1996 | சுருதி சத்தியேந்திராவின் அகால மரணம் | Sudden demise of Suruthy Sathyendra |
| 11 July 1997 | இரண்டாவது மகனுக்கும், எலிஸா வீதியைச் சேர்ந்த பார்வதி தர்மரெட்ணத்துக்கும் மணமகள் இல்லத்தில் திருமணம். | Second son married, Parvathy Ravivarman of Eliza’s lane, Batticaloa at the bride’s residence. |
| 1998 | பிரதா சுரேந்திரனின் பிறப்பின் நிமித்தம் இங்கிலாந்து பயணம் | Travelled to UK for the birth of Prada Surendran |
| December 1998 | கற்பகத்தின் பூப்பு நீராட்டு விழாவிலும் பரத நாட்டிய அரங்கேற்றத்திலும் கலந்து கொள்ள வேண்டி சிங்கப்பூரூடாக தென்னாபிரிக்கப் பயணம் | Travelled to South Africa via Singapore to attend the Coming of Age ceremony and Bharatha Natya Arangertam of Katpaham |

| காலம் / Period | நிகழ்வுகள் | Events |
|---|---|---|
| | | |
| 13 August 2002 | மூன்றாவது மகனது இல்லத்தில் எண்பதாவது ஆண்டு நிறைவு கொண்டாட்டம் | 80th Birthday celebrations at her third son's house in Kallady. |
| 3-4 June 2005 | 30 ஆண்டுகளுக்குப் பின் ஐந்து மக்களுடனும் மட்டக்களப்பில் ஒன்று கூடல் | Family re-union with all 5 sons after 30 years in Batticaloa |
| 01 February 2007 | இறைவன் பாதங்களில் சரணடைந்தார் | Rested at the feet of Almighty |
| 04 February 2007 | பூதவுடல் கல்லடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது | Burial took place at Kallady cemetery |



# என் தங்கை இலட்சுமிப்பிள்ளை

எங்கள் குடும்பத்தில் ஐந்தாம் பிள்ளையாகவும் அழகுச் சிலையாகவும் பிறந்தவள் தங்கை இலட்சுமிப்பிள்ளை.

சாஸ்திரம் தெரிந்த என் தகப்பனார் என் தங்கையின் ஜாதகக்குறிப்பைக் கணித்துக் கொண்டும் ஐந்தாங்கால் அவதரிப்பைப் புரிந்து கொண்டும் அவள் அதிர்ஷ்ட சாலியாக வாழ்வாள் என்று அடிக்கடி கூறிக் கொண்டது எத்தனை உண்மை!

சிறுமியாக இருக்கும் போதே நல்ல வாய் வன்மை கொண்டவளாயிருந்தாள். தன் வாதத் திறமையினால் எங்கள் தகப்பனாருடன் வாதம் செய்து தான் நினைத்ததை சாதித்துக் கொள்வாள். மெலிந்த அழகிய தோற்றம் கொண்ட என் தங்கையை எம் தகப்பனார் ‘முள்ளி’ என்று செல்லமாக அழைப்பார்.

என் தங்கை தனது ஆரம்பக் கல்வியை எங்கள் கிராமப் பாடசாலையான முனைக்காடு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தொடங்கினாள். அதைத் தொடர்ந்து 7ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை கல்முனை பெண்கள் விடுதிப் பாடசாலையில் (Girls Boarding School) பயின்றாள். அந்தக் கால கட்டத்தில் நான் அங்கு ஆசிரியையாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தமையால் என தங்கையின் படிப்பக்கு உதவக் கூடியதாயிருந்தது என் பாக்கியமே. பின்னர் மட்டக்களப்பு பெண்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அனுமதி பெற்று மூன்று வருடம் பயிற்சி பெற்று 1947ம் ஆண்டு ஆவணியில் சித்தி பெற்றாள். அவள் சித்தி பெற்று ஆசிரியையாகப் பணி ஏற்பதைக் காணாமலே எங்கள் தந்தை அவ்வருடம் சித்திரை மாதமே இறைபதம் அடைந்து விட்டார்.

இலட்சுமிப் பிள்ளை முனைக்காடு மெதடிஸ்த மிஷன் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியேற்றவுடன் எம் தந்தை விருப்பப்படி எம் ஏனைய சகோதரர்கள் கல்வியில் நான் சிரத்தை எடுக்க, எமது குடும்பத்துக்கு பெரிய இல்லம் கட்டும் பணியைத் தான் முன்னின்று எடுத்து நடத்தினாள். எம் தந்தை மறைவுக்குப் பின்னர் நானும் வெளியூரில் கடமை புரிய வேண்டிநேரிட்டதால் எங்கள் குடும்பத்திற்கு தலைமை தாங்கி வழி நடத்தினாள்.

1951ம் ஆண்டில் மட்டுநகரில் பிரபல்யமான வழக்கறிஞரும். AFC ஐயா என பெயர் பெற்றவரும், தாராள சிந்தையுள்ளவருமான திரு தா்மலிங்கம் மயில்வாகனம் அவா்களை காதல் திருமணம் புரிந்து கொண்டு ஐந்து ஆண்களுக்கு அன்னையானாள்.

1974 ம் ஆண்டு தனது அன்புக் கணவரை இழந்து இன்னலுற்ற போதிலும் தொடா்ந்து தன் சகோதரா்களினதும் அவா்களது குடும்பங்களினதும் முன்னேற்றத்தில் பெரும் பங்கு கொண்டு உதவி கொடுக்கும் கரங்களாக வாழ்ந்தாள்.

"ஈன்று புறந்தருளல் என் தலைக் கடனே
சான்றோனாக்குவது தந்தையின் கடனே"

என்ற செய்யுளின் இரண்டாம் அடியில் இடா் நேரந்த போது, தந்தை அற்ற காலை அதுவும் என் தலையாய கடனே என்று தன் புதல்வா்களின் மேல் படிப்பைத் தொடா்ந்தெடுத்து ஊட்டி அனைவரையும் பட்டதாரியாக்கியது மட்டுமன்றி சிறந்த கல்விமான்களாகவும் நிபுணா்களாகவும் நான்கு கண்டங்களிலும் பணியாற்ற வழியமைத்தாள். பண்புள்ள மைந்தராக வளா்த்தெடுத்த தன பிள்ளைகளுக்கு உரிய பருவத்தில் அவா்கள் விருப்புக்கேற்ப மணம் முடித்து வைத்து, பதினொரு பேரப்பிள்ளைகளையும் கண்டு இறுதி வரை செல்வச் சிறப்புடனும் கீா்த்தியுடனும் வாழ்ந்தாள். என் தங்கை இறுதிவரை எம் தாயாரை ஆதரித்துப் பேணியதை யாரும் மறக்க முடியாது.
இலட்சுமிப்பிள்ளையின் இழப்பு எமக்கு ஓா் பேரிழப்பு. என் தங்கை விட்டுச் சென்ற வெற்றிடத்தை யாா்தான் நிரப்புவாா்?

அவள் ஆத்மா இறைபதம் அடைய வேண்டும்

அன்பு அக்கா

கனடா **சீதேவிப் பிள்ளை கந்தையா**

# எங்கள் சின்னக்கா என்ற சீமாட்டி

சின்ன முனைக்காட்டில் சீனிவாசகம் ஈன்றெடுத்த சீமாட்டி எங்கள் சின்னக்கா இலட்சுமிப்பிள்ளைக்கு பாசமிகு தம்பி பசுபதி உரைக்கும் ஓர் இரங்கல்.

அறியாமை எனும் இருளில் தவித்த எங்களை அறிவெனும் பேரொளியில் நிறுத்திவிட்ட அக்காவே! நீ மறைந்த துயர் என் நெஞ்சை விட்டகலுதில்லையே! வியாழன் ஒன்றில் உயிர்நீர்த்து வெள்ளி சனி யோகேஸ் மனையில் வீற்றிருந்தாய். உன் கந்து கவர் கண்டு கண்ணீர் நதியாய் சொரிந்தேனே!

உன் கணவன் உன் சொல்லைத்தட்டி நடந்ததை நான் என்றென்றும் கண்டதில்லை. உன் புதல்வர்கள் உன்சொற்கேட்டு நடந்ததைத் தான் நான் கண்டுள்ளேன்.

எம் தந்தை எம்மைப்பார்த்து, பின் உம்மைப்பார்த்து என் இம்மூன்று கீழ்க்கன்றுகளையும் உனக்கும் உன் அக்காவுக்குமே அடைக்கலம் தருகின்றேன் என்றுரைத்ததை நான் கேட்டேன். தந்தை சொல் தட்டாமல் நீ வாழ்ந்தாயே சகோதரியே!! என்ன செய்வேன்!

அன்றொரு நாள் நான் விபத்தில் சிக்க, மட்/ பெரியாஸ்பத்திரியில் என் உடல் 13 நாள் கிடக்க, உயிர் பறந்து எங்கோ உலாவி விட்டுவர, ரிக்கட் வெட்டி, நீர் நிம்மதியாக உறங்கி வந்த குஞ்சித்தம்பி அறையில் உன் படுக்கையறை எனக்கீர்ந்து என்னை ஈன்றதாயினும் மேலாக தூக்கிச்சாத்தி கழுவித்துடைத்து உணவூட்டி உறங்கவைத்த உயரிய சகோதர பாசத்தை நான் எங்கும் கண்டதில்லை.

என் சகோதரி சகோதரனையும், உன் பிள்ளைகள் போல் என் பிள்ளைகளையும் இரத்தபாசத்தால் இறுகப்பிடித்த சகோதரி நீ!

01.02.2007 திகதியன்று இருவிழியும் ஆறாகிப்புனல் சொரிய வேறு சொற்கள் கூறாமல் சிவனே சிவனே என்று தலைமேல் குவித்த கைகளுடன் மயங்கி நின்றேனே அக்கா !!!

தம்பி

கல்லடி **பசுபதி**

## தங்கையின் சமர்ப்பணம்

எக்குறையுமில்லாது அகம்தனில் எக்கறையுமற்றவராய்
எப்போதும் எல்லோர்மீதும் அன்புகாட்டி அரவணைக்கும்
அக்கறைமிகு அக்காவின் ஆத்மா சாந்தி பெற
அனு தினமும் பிரார்த்திக்கின்றேன்
பிறப்புமுதல் சோதரராய் பிரியமுடன் பிணைந்திருந்தோம்
பின்னாளில் இணைந்திட்ட இல்லற வாழ்வில் கூட
நம் ஈர் குடும்பங்களும் நலமுடன் ஒன்றாக
நாள்தோறும் நன்றாக வாழ்ந்தசேதி நீயறிவாய்

உன்வயிற்றில் உதித்திட்ட உத்தமர்கள் ஐவரும்
என்வயிற்று இருவருடன் இணைந்துநிதம் எழுவராய்
ஆடையோ ஆபரணமோ அனைத்திலும் ஒருவராய்
இன்பமாய் வாழ்ந்திருக்க நாம்வளர்த்தோம் நலமாக

உன்மூத்த மூன்று பிள்ளைகளை உரிமையோடு
நான் வளர்த்து அதிலும் மூத்த பிள்ளை உயர் கல்வி
கற்றிட உற்றாரும் போற்றிட எம்மோடுஇருந்து
பண்பைக் கற்று பல்கலைக்கழகம் சென்று பட்டமும்
பெற்றிட பகலிரவாய் நான் பட்ட பாடுகளை நீயறிவாய்

நோயுற்று நீயிருந்த ஒவ்வொரு நொடிப்பொழுதும்
சேயாக நானிருந்து சேவைகள் பலசெய்தேன்
ஓயாது ஒடிந்தொடிந்து உரையாடிய உன்மூச்சு
ஓய்வெடுக்கும் வேளைதனில் மௌனமாய்ப் போனதேனோ?

"நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகை யென்றேறிக் கடைமுறை
நாட்டார் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்றவாறே" - எனும்
திருமந்திர வாக்கினை தினந்தோறும் மனங்கொண்டு
ஆறுதல் கொள்கின்றேன்

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு தங்கை

கல்லடி **அருள்ஞானதேவி சபாபதிப்பிள்னள**

# A TRIBUTE TO MY LOVING SISTER

I sit and stare, hoping it was a nightmare - to think that my sister is no more. I cannot believe that she is dead and gone.

To recollect what she has done in her life- I remember her raising her five young boys and fulfilling all the obligations with a mother’s love. It was her moral and financial support that helped me to live in this world as a person who is recognized by others.

We used to discuss everything - the good and the bad. Although she always expected my opinions, she made her own decisions and acted accordingly.

Akka, you will never be forgotten deep down inside my heart. The thing that hurts so much is that we had to part. You were a very precious person and you will always be. I cannot express to you how much pain I am in.

Your loving brother

Colombo **Manickam**



# நெஞ்சம் மறப்பதில்லை

என் நெஞ்சை விட்டு என்றென்றும் மறையா என் தாயின் நினைவுகளை இச் சந்தர்ப்பத்தில் அசை போட்டுப் பார்க்கிறேன்.........

என் வாழ்வெனும் புத்தகத்தின் இனிக்கும் அத்தியாயங்களுள் ஒன்று, நான பல்கலைக்கழக படிப்புக்காக வீட்டை விட்டு கொழும்புக்குப் போகும் வரையிலான என் முதல் இருபது வருட காலம் என்றால் மிகையில்லை. அப்பா, அம்மா தம்பிகள் என ஒரு close- knit family யாக, கவலைகள் பொறுப்புகள் எதுவுமின்றி சுதந்திரமாகத் திரிந்த அந்த நாட்கள் திரும்பவும் வாராதா என்றிருக்கிறது.

நாங்கள் வசித்த 84, Trinco Road வீட்டில் ஆரம்பித்த வாழ்க்கை தான் என் நினைவில் முதன் முதல் மங்கலாகத் தெரியும் ஞாபகம் . வாடகை வீடானாலும் எப்போதும் கலகலவென்றிருக்கும் அந்த வீட்டில் சனக் கூட்டத்துக்குக் குறைவிருக்காது. அந்தக் கால கட்டத்தில் தான் 1960ம் ஆண்டு நடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அப்பா சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டார். வீட்டுக்கு வருபவர்களையெல்லாம் உபசரித்து, அத்தனை பேருடைய தேவைகளையும் கவனிப்பதுடன் அப்பாவுடன் சேர்ந்து பல இடங்களுக்கு வாக்காளர்களைச் சந்திக்கப் போவதும் அம்மாவின் அன்றாடக் கடமைகளாகிப் போனது.

இந்த வீட்டில் இருந்த போது நாங்கள் மேற்கொண்ட எத்தனையோ பயண அனுபவங்கள் இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கின்றன. இந்தப் பயணங்களுக்கெல்லாம் ஆதாரசுருதியாக இருந்தது அப்பாவின் EL 7727 இலக்கம் கொண்ட Ford Zephyr car தான். மாங்கேணிக்கு பாலப் பழமும், றூகத்திற்கு நுரைப்பழமும் பறிக்கப் போனது, யாழ்ப்பாணத்துக்கு கந்தப்புப் பெரியப்பா வீட்டுக்கு போனது, பேராதனையில் ஒப்பி வீட்டுக்குப் போனது, அளுத்நுவரைக்கு சின்னப்பா வீட்டுக்குப் போனது எனச்சில குறிப்பிட்ட பயணங்களைத் தவிரவும், வழமையான வார இறுதியில் செல்லும் உன்னிச்சை வயல் பயணங்கள், கிறிஸ்துமஸ் விடுமுறைகளில் அம்மாவின் ஊரான முனைக்காட்டுப் பயணங்கள், கல்லடி வீடு கட்டத் தொடங்கிய போது மரம் வாங்குவதற்கென செல்லும் கல்குடாப் பயணங்கள், அங்கு லில்லி அக்கா வீட்டிலிருந்து குளிப்பதற்குச் செல்லும் பாசிக்குடாப் பயணங்கள், எல்லாம் நினைக்க நினைக்கத் தித்திக்கும் இனிய அனுபவங்கள். இந்தப் பயண அனுபவங்கள் எல்லாம் இனிதாக அமைந்ததில் அம்மாவின் பங்கு மிகப் பெரியது. அப்பா எங்கு போகத் திட்டமிட்டாலும் மறுப்புக் கூறாமல் முழு ஒத்துழைப்பு தருவதுடன் உணவு முதல் எல்லா ஆயத்தங்களும் செய்துவிடுவார். அத்துடன்

அம்மாவின் கலகலப்பான சுபாவம் எமது பயணங்களையெல்லம் மகிழ்ச்சிகரமாக்கும்.

உண்மையில் நான் சிறுவயதில் அப்பா செல்லமாகத் தானிருந்தேன். ஏனெனில் அப்போதெல்லாம் தன் பிள்ளைகளைக் கண்டிப்பது அம்மா தான். அப்பாவுக்குக் கோபம் வந்தால் அவர் தரும் உச்ச பட்ச தண்டனை காதைப் பிடித்து திருகுவது தான். அம்மாவிடமிருந்தோ செய்யும் குழப்படிகளுக்கு அடியும் கிடைக்கும். அதனாலோ என்னவோ அம்மாவிடம் ஒட்டுதல் குறைவு. அந்த வயதில் குடும்ப நலனில் அம்மாவின் பங்கு அவ்வளவு பெரிதாகத் தெரியவில்லை. ஆனால் பாதுகாப்பான அந்தக் கூட்டிலிருந்து வெளியேறி வெளியுலகை மிதித்த பின்னர் தான் எங்கள் சந்தோஷமான நிம்மதியான சிக்கலற்ற அந்த வாழ்க்கையில் அம்மாவின் பங்கின் மகத்துவத்தை உணரக் கூடியதாயிருந்தது.

ஒரு குடும்பத்தில தலைவர் எத்தனை நல்லவராக இருந்தாலும் வீட்டுக்கு வரும் விருந்தினரை உபசரிப்பது இல்லத்தலைவியின் பொறுப்பாகிறது. எங்கள் வீடு எப்போதும் உறவினர்களாலும் நண்பர்களாலும் நிறைந்து கலகலவென இருந்ததற்கு காரணம் அம்மாவின் விருந்தோம்பும் பண்பு தான். அந்தப் பண்புக்கு உறுதுணையாக இருந்தது அவருடைய சமையல் திறமை. இது அவருக்கு தம்பிரம்மாவிடமிருந்து (அம்மம்மா) தான் வந்திருக்க வேண்டும். நான் பல்கலைக் கழக விடுமுறைகளில் வீட்டுக்கு வரும் வேளைகளில்
அப்பா வாங்கிவரும் எனக்குப் பிடித்த மரக்கறி, மீன், மாமிச வகைகளை விதவிதமாக சமைத்துப் போடுவதில் இன்பம் கண்டார்.

என் அப்பா-அம்மாவுக்கிடையில் நிலவிய அழகான உறவை எடுததுச் சொல்ல வார்த்தைகளே கிடைக்காது. அவர்கள் இருவரும் என்றும் சண்டையிட்டோ வாக்குவாதப் பட்டோ நான் அறியேன். வேறு எத்தனையோ பேர்களது குடும்பப் பிரச்சினைகளை இரண்டு பேருமாகத் தீர்த்து வைத்ததைத் தான் நானறிவேன். ‘ஒவ்வோர் ஆணிண் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள்’ என்பதை நிரூபிக்கும் வண்ணம் அமைந்திருந்தது அம்மாவின் வாழ்க்கை. அப்பாவின் ஒவ்வொரு முயற்சிக்கும் முழு மூச்சாகத் தோள் கொடுத்து அவருடைய சமூகப் பணிகள் அனைத்திற்கும் உறுதுணையாக இருந்ததை எல்லோரும் அறிவார்கள். மக்கள் வங்கி, கூட்டுறவு வங்கி, பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் என பல நிறுவனங்களில் அப்பா முக்கிய பதவி வகித்ததற்கு முக்கிய காரணமே அம்மா வீட்டைப் பற்றிய கவலைகளிலிருந்து அவருக்கு விடுதலை கொடுத்தது தான்.

சிறுவயது முதலே அம்மாவிடம் நான் கண்டு அதிசயித்த பழக்கம் அவர் தன் நேரத்தை செலவழிக்கும் விதம். சிறிது நேரத்தையும் கூட வீணாக்காது காலை எழுந்த நேரம் முதல் இரவு தூங்கப் போவது வரை ஏதாவது செய்து கொண்டேயிருப்பார். வீட்டு முற்றம் பெருக்குவது முதல் இரவில் தினக் குறிப்பு,

கணக்குவழக்கு எழுதுவது வரை எந்த வேலையையும் தள்ளிப் போடவே மாட்டார்.இத்தனைக்கும் நடுவில் தனக்குப் பிடித்த தையல் வேலையையும் செய்வார்; கல்கி மற்றும் வாரப் பத்திரிகைகளையும் படிப்பார்.

அப்பாவின் மறைவு யாருமே எதிர்பாராத ஒன்று. இதனால் அம்மா எந்தளவு பாதிக்கப் பட்டாரென்பது அவரை அறிந்க எல்லோருக்குமே தெரியும். அப்பாவின் இழப்பு தன் மக்களைப் பாதிக்கக் கூடாது என்று கொண்ட வைராக்கியத்தினால் அந்தப் பெரிய இழப்பைத் தாங்கிக் கொண்டு எங்கள் ஐவரையும் பாதுகாத்து வளர்த்தது நாங்கள்முற்பிறவியில் செய்த புண்ணியமே. அப்பா மீதுஅவர் வைத்திருந்த அன்பு, பிரேமை, பக்தி எல்லாம் அவரின் ஒவ்வொரு செயலிலும் தெரிந்தது. அப்பாவின் உருவப் படத்துக்கு தினமும் மாலை கட்டிப் போடுவது, அவருக்குப் பிடித்த வேளாண்மைச் செய்கையை உன்னிச்சையில் தொடர்ந்து செய்தது, அவர் ஆசைப் படியே குஞ்சுத் தம்பியை பல தடைகள், ஏமாற்றங்கள், பணக் கஷ்டங்களையெல்லாம் தாங்கிக் கொண்டு இங்கிலாந்துக்குப் படிக்க அனுப்பியது என பெரிய பட்டியலே இடலாம். தன்னுடைய நிர்வாகத் திறமையினாலும் சிக்கனத்தினாலும் எங்களுக்கு குறையே தெரியாமல் வளர்த்த இரும்பப் பெண்மணியான அம்மாவைத் தாயாக அடைந்ததற்கு இன்று பெருமைப் படுகிறேன். இந்தக் கால கட்டத்தில் தான் அம்மாவின் வைராக்கியம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி போனற எல்லாக்குணங்களையும் கண்கூடாகக் கண்டு அதன் பலன்களை அனுபவித்தேன்.

அப்பா வாழ்ந்த காலத்தில் எப்படி எங்கள் வீடு உறவினர்களாலும் நண்பர்களாலும் நிறைந்திருக்குமோ அப்பாவின் மறைவுக்குப் பின்னரும் அந்த நிலையில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. என் பல்கலைக் கழக நண்பர்கள் யாருக்கும் மட்டக்களப்புக்கு வேலை மாற்றம் கிடைத்து வந்தால், அவர்கள் ஊரை விட்டுப் போகும் வரையில் தன் வீட்டிலேயே தங்க வைத்து தன் மக்களைப் போலக் கவனித்துக் கொள்வார். இந்த வீட்டில் தான் தனியாக ஒருவேளை சாப்பிட்ட நாட்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்று அம்மா சொல்வதுண்டு.

நான் ஒரு சாப்பாட்டுப் பிரியன் என்பது என்னை அறிந்த எல்லோருக்குமே தெரிந்த விஷயம். அம்மாவின் சமையலில் எனக்குப் பிடித்த பதார்த்தங்கள் எண்ணிலடங்கா. காலையில் எழுந்ததும் என்னை எழுப்பித் தரும் பால் கோப்பியில் தொடங்கி கெழுத்தி மீன் கடையல், இறைச்சிப் பால் பொரியல், வட்டுக் கத்தரி வதக்கல், தும்பங்காய் வெள்ளைக் கறி, இறால் கருவாடு சேர்த்த வெந்தயக்குழம்பு, பீர்க்கங்காய் கடையல் என எல்லாவற்றையும் செய்து தந்து என் நாக்கை அவற்றுக்கு அடிமையாக்கி விடுவார். இப்போது நினைத்தால் அம்மாவின் சமையல் தான் நான் சாப்பாட்டுப் பிரியனாகக் காரணமோ என்று தோன்றுகிறது. அம்மாவின் முந்திரிப் பலகாரம் எங்கள் உறவினர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றது.

எங்கள் வீட்டுக்கு வந்து சாப்பிட்ட எவருமே அம்மாவின் கைப்பக்குவத்தை பாராட்டாமல் சென்றதில்லை.

எனது காதல் திருமணத்துக்கு முதலில் எதிர்ப்புத் தெரிவித்தாலும் பின்னர் தானே முன்னின்று எங்கள் கல்யாணத்தை தடபுடலாக நடத்தி வைத்ததை நினைவு கூரும் போது என் கண் பனிக்கிறது. எங்கள் முதல் குழந்தை கற்பகம் பிறந்த போது ஸாம்பியாவுக்கு வந்து ஆறு மாதம் தங்கியிருந்து தாயையும் சேயையும் மட்டுமல்ல என்னையும் கவனித்துக் கொண்டது இன்று என் நெஞ்சில் நிழலாடுகிறது. குழந்தை இரவு வேளைகளில் அழும் போது கண் விழிக்கும் கஷ்டம், மற்ற தனிக் குடித்தன கணவன்களுக்கு ஏற்படுவது போல அம்மாவின் தயவால் எனக்கு ஏற்படவில்லை.

நாங்கள் தென்னாபிரிக்காவுக்கு இடம் பெயர்ந்த பின்னரும் இரண்டு தடவை வந்திருந்து எங்களுடன் மூன்று மாதங்களுக்கு மேலாகத் தங்கியிருந்து கழித்த நாட்கள் மிக இனிமையானவை. தனது முதல் பேத்தியின் வயதுக்கு வந்த சடங்கிற்கு தனக்கு வர முடிந்ததை தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டமாகக் கருதினார். அது மட்டுமன்றி கற்பகத்தின் பரத நாட்டிய அரங்கேற்றத்தையும் பார்க்க முடிந்தது அவருக்கு கூடுதல் மகிழ்ச்சியைக் கொடுத்தது. கற்பகத்தின் பூப்பு நீராட்டு விழா விருந்தின் போது என் வீட்டுத் தோட்டத்தில் விளைந்த சின்ன வெங்காயத்தில் பத்து கிலோவுக்கும் மேலாக தோலுரித்து தன் கைப்பட வெந்தயக் குழம்பு சமைத்து பரிமாறியதையும், அதை விருந்துக்கு வந்தவர்கள் பாரட்டியதையும் மறக்க முடியாது.

தன் ஆபிரிக்க விஜயத்தின் போது தன்னை விருந்துக்கு அழைத்த, தனக்குப் பரிசுகள் தந்த என் நண்பர்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து தனது நாட்குறிப்பில் எழுதியிருந்ததை அவரது மறைவிற்குப் பின்னர் படித்த போது அவருக்கிருந்த நன்றியுணர்ச்சி புலப்பட்டது.

அம்மாவுக்கு புது இடங்களுக்கு சுற்றுலா செல்வது மிகவும் பிடித்தமான விஷயம். இங்கு வந்து தங்கியிருந்த போது நாங்கள் கூப்பிட்ட இடங்களுக்கெல்லாம் சந்தோஷமாக வந்து நன்றாக அனுபவித்து மகிழ்ந்தார். அவருடைய மக்கள் எல்லோரும் வெவ்வேறு நாடுகளில் வசிக்க வேண்டியிருந்ததுவும் அவருடைய ஆசைக்கு ஏதுவாக அமைந்தது. ஸாம்பியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, இங்கிலாந்து எனப் பல நாடுகளுக்கும் பயணம் செய்து பேரப் பிள்ளைகளுடன் அவரால் சந்தோஷத்தை அனுபவிக்க முடிந்ததற்காக நான் இன்று கடவுளுக்கு நன்றி கூறுகிறேன்.

அம்மாவின் இறுதி நாட்கள்நிம்மதியாகாவும் மனநிறைவுடனும் இருந்ததை எவரும் மறுக்க முடியாது. தான் பெற்ற மக்கள் ஐவரும் குடும்ப வாழ்வில் சந்தோஷமாக

இருக்கிறார்கள் என்ற எண்ணம் அவரை கிருப்தியுடன் வாழவைத்தது. இதில் அவருடைய மருமக்களுக்கும் பெரும் பங்குண்டு என்பதனால் மூத்த மகன் என்ற முறையில் எங்கள் குடும்பத்தில் வாழ்க்கைப் பட்ட அம்மாவின் மருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக்க வேண்டியது என் கடமையாகிறது. அம்மாவின் மகிழ்ச்சிக்கு உச்ச கட்டமாக நடந்த சம்பவம் 2005ம் ஆண்டில் நாங்கள் ஐவரும் 30 வருஷங்களுக்குப் பிறகு சேர்ந்த ஒன்று கூடல்.

இறுதியில், தான் இஷ்டப் பட்டது போல் பிறருக்குப் பாரமாக இருக்காமல், தானும் கஷ்டப்படாமல் அப்பாவிடம் போய்ச் சேர்ந்து விட்டார். தான் காதலித்த, ஆராதித்த, வணங்கிய கணவனை இழந்து 33 ஆண்டுகள் இவ்வுலகத்தில் பல வேதனைகளையும் துயரங்களையும் கஷ்டங்களையும் ஏமாற்றங்களையும் தாங்கிக் கொண்டு அம்மா உயிர் வாழ்ந்ததெல்லாம் எங்கள் ஐவருக்காகவுமே. இதை நாங்கள் எல்லோரும் உணர்ந்து அவரை தாயாக அடைந்ததற்காகப் பெருமைப் படுகிறோம்.

பிரிய மகன்

**South Africa** **சாந்திக்குமார்**

## என்னுயிர் அம்மா

என் உயிரும் உடலும் ஈந்த என் அம்மா எங்களைவரையும் உருவாக்கியதுமல்லாமல், வளர்த்து கல்வியூட்டி இம்மண்ணில் மனிதர்களாய் ஆளாக்கியதும் எங்கள் அம்மாதான்.

எங்கள் அப்பா எங்களுக்கு அறிவை அறிய கற்றுக் கெடுத்தார், அகங்காரம் காட்டாத பண்பைப் பழக்கினார், அதிகாரம் இல்லா நட்பை நாங்கள் உணரவைத்தார். காலன் அவரை காலம் பாராது களவாடி சென்றதால் கறைபடியாமல், கற்றோரும் மற்றோரும் போற்ற, கலையாத இளமையுடன் கதையாகிப் போனார்.

அதன்பின் அம்மாவின் கண்களில் நிண்ட காலம் அடக்கமுடியாத கண்ணீரைத்தான் கண்டேன். அம்மா அந்தக் கண்ணீரில் கரைந்து கதியற்று போய்விட்டால் என்ன செய்வதென்று நான் எண்ணியதுண்டு. தன்னம்பிக்கை, தளராத முயற்சி, எல்லாவற்றிலும் மேலாக எங்கள் ஐந்து பேரிலும் கொண்ட தணியாத

தாய்ப்பாசமும்தான் எங்கள் அம்மாவை தன் பிள்ளைகளை அணைத்துக்கெண்டு தன் பயணத்தை தொடரவைத்தது.

எங்களூக்குத்தான் தெரியும் எங்கள் அம்மா எப்படி எல்லாப் பொறுப்புகளையும் தானே சுமந்து கெண்டு எங்கள் படிப்பிற்காக, எங்கள் நல்வாழ்விற்காக எல்லாக் கஷ்டங்களையும் தாங்கிக் கொன்டு எங்கள் கண்களில் கண்ணீரை வரவிடாமல் வளர்த்து ஆளாக்கி விட்டா என்று.

பிள்ளைகள் ஐவரும் ஆண்கள் என்பதால் பிரியமுடன் அணைத்து தாலாட்ட ஒரு மகள் இல்லை என்ற குறை எப்போதும் அம்மாவுடன் கூடவே இருந்தது, இதை அம்மாவைச் சந்தித்த ஒவ்வெரு பெண்பிள்ளையும் அறியக்கூடியதாய் இருந்தது. தன் உள் மனதில் ஊறிக்கிடந்த எண்ணங்களை, நினைவுகளை பகிர்ந்துகொள்ள அம்மாவின் இறுதி நாட்களில் அருகில் இருக்முடியாது போனது என் துர்ப்பாக்கியமே. காலங்கள் மாறாமல், கலையாத குடும்பமாய் கல்லடியில் வசித்திருந்தோம் என்றால் நிட்சயம் நீண்டதோர் கதையை எல்லோருடனும் பகிர்ந்த்திருப்போம் ஏனென்றால் எங்கள் அம்மாவின் மகத்தான வாழ்வில் கடந்த அத்தனை நிகழ்வுகளையும் தன் மனதில் அடக்கி அடைத்து தன்னுடனே எடுத்துச் சென்றுவிட்டா.

எங்கள் அம்மாவும் எல்லாருடைய அம்மாவைப் போன்றே குற்றம் குறையுள்ள ஒரு அன்பான தாய்தான். தன் மைந்தர்கள் ஐவருக்கும் படிப்புடன் பண்புகளையும் கற்கவைத்தார். மயில்க்குலத்துரிமை என்று கம்பநாட்டார் தன் காவியத்தில் சொல்லியதுபோல் எங்கள் ஐவரையும், மூத்தோனை மதித்து மரியாதை செய்து வாழப் பண்ணிணார். மற்றோரை மதிக்கவும், உற்றாரை உபசரிக்கவும், வாழ்வில் துணைநின்றோரை துயிலிலும்கூட மறவாதிருக்கவும் வேண்டும் என்று எங்களைவர் இதயத்திலும் அன்பெனும் மைகொண்டு ஆளமாக அம்மா எழுதியது இன்னும் அழியாமல்தான் இருக்கின்றது.

எங்கள் நண்பர்கள் மட்டுமல்ல, தான் வாழ்வில் சந்தித்த எல்லோரையுமே அம்மா, உரிமையுடன் கண்டித்து உணவுடன் அன்பையும் ஊட்டியதால்தான் இவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் இறுதிவரை அம்மாவுடன் தொடர்பாய் இருந்ததை காணமுடிந்தது.

பின் நாட்களில் பிள்ளைகளுடன் சென்று வாழப்பிடித்தாலும், எங்கள் அப்பா தனக்காக கல்லடியில் கட்டிய வீட்டிலே தன் கடைசிக் காலம் கழிய வேண்டும், தான் பிறருக்கோ தன் பிள்ளைகளுக்கோ பாரமாய் போகுமுன் வரும் சாவுதான் வேண்டும் என்று வேண்டிப்பெற்று எங்களையெல்லாம் ஏங்கவைத்து சென்றுவிட்டா.

அம்மா, நீங்கள் எனக்கு கற்றுத்தந்தவற்றில் ஒரு சிலவற்றையேனும் என் பிள்ளைகளில் படியவைத்தால் உங்கள் மகனாய்ப் பிறந்த பயனையடைந்ததாய் மகிழ்வேன்.

அம்மா, உங்கள் தூய நினைவுகளில் என் தீய பழக்கங்களை அழித்து நீங்கள் விரும்பிய மகன்களில் ஒருவராய் இறுதிவரை நான் வாழ என் இதயத்தில் உங்களை இருத்தி இறைவனிடம் மண்றாடுகிறேன்.

அம்மா, காலன் என்னை நேரம் பார்த்து தேடிவரும்போது நிம்மதியுடன் வருவேன் ஏன் என்றால் எனக்குத் தெரியும் என் அம்மா, நான் வீடு வரும் போதெல்லாம் எனக்காக காத்திருந்தது போல் அங்கேயும் காத்திருப்பா என்று.

அன்பு மகன்

Australia **குஞ்சித்தம்பி (ரவிவர்மன்)**

## <u>என் அம்மா</u>

தாயின் அன்புக்கு நிகர் எதுவுமில்லை என்பதை நாம் பலர் மூலமாக, பல வழிகளிலும் கேட்டாலும் அதனை அனுபவம் மூலமாக அறியும் போதுதான் அதனை வார்த்தைகளில் அடக்கிவிட முடியாது என்பதனை உணர்கிறோம். தாயின் பாசத்தை சிறு வயதில் உணரும் பக்குவம் இல்லாவிட்டாலும் பிற்காலத்தில் தான் அதன் மகத்துவம் உணரப்படுகிறது.

நான் அம்மாவை மூன்று நிலைகளில் பார்த்தேன்- அப்பாவுடன் சந்தோஷமாகக் கழித்த காலம், அப்பாவின் மறைவக்குப் பின்னர் எங்களைத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து வளர்த்த காலம், தன் கடமைகள் எல்லாம் முடிந்த திருப்தியில் பிள்ளைகள், பேரப் பிள்ளைகளோடு கழித்த ஓய்வு காலம் என்ற மூன்று நிலைகளையும் இன்று என் கண்ணோட்டத்தில் நினைத்துப் பார்க்கிறேன்............!

அப்பாவுடன் வாழ்ந்த காலகட்டத்தில் அம்மாவை கண்டிப்பானவராகவும், அப்பாவை அன்பு செலுத்துபவராகவும் பார்த்தேன் என்பதே உண்மை. சிறுவயதில் அப்பா எங்களை அடித்ததோ திட்டியதோ கிடையாது. அந்நாட்களில் நாங்கள்

செய்த குறும்புகளுக்கு (குறிப்பாக நானும் கோபியும்) அம்மாவிடம் வாங்கிய அடிகளை இப்போதும் நினைத்துப் பார்ப்பேன். ஆனாலும் எங்கள் எல்லோருடைய தேவைகளையும் குறையில்லாமல் கவனித்தார். எங்கள் ஐவரையும் அப்பாவின் உதவியுடன் எப்படி கருத்தாக வளர்த்தார் என்று இப்போது தான் புரிகிறது

1974ல் ஏற்பட்ட அப்பாவின் திடீர் மரணம் அம்மாவைப் பாதித்த விதத்தைச் சொல்ல வார்த்தைகளே கிடையாது. பின்னர் எத்தனையோ வருட காலங்கள் அப்பாவை நினைத்து அழுததை நேரில் கண்ட போது தான் அப்பா மீது அவர் கொண்டிருந்த நேசம் புரிந்தது. அப்பாவின் பிரிவினால் ஏற்பட்ட பாதிப்பின் பிரதிபலிப்பு இறக்கும் வரை அவரிடம் இருந்தது. இப்படி வாழ்ந்த அந்நியோன்ய தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தது என் பாக்கியமே!

நாங்கள் எல்லோரும் பாடசாலை செல்லும் பருவத்திலேயே அப்பாவை இழந்தோம். அந்த அதிர்ச்சியிலிருந்து மீள அம்மாவுக்கு பல ஆண்டுகள் எடுத்தாலும் எங்கள் வளர்ச்சியில் அக்கறையுடன் ஈடுபட்டு எங்கள் முன்னேற்றத்துக்காக அவர் பட்ட கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. விடியற் காலையில் பஸ்ஸில் பிரயாணம் செய்து உன்னிச்சை வயல் சென்று அப்பாவின் வேலைகளைத் தொடர்ந்தார். எங்கள் நல்வாழ்வுக்காக அவர் செய்த தியாகங்களை பட்டியலிட முடியாது.

தாய் அன்பு எத்துணை ஆழமானது என்பதை, நான் மலேரியாக் காய்ச்சலினால் மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்த போது தான் முழுமையாக உணர்ந்தேன்.

எங்கள் ஐந்துபேரின் நண்பர்கள் எம் வீட்டுக்கு எந்த நேரம் வந்தாலும் அவர்களை உபசரித்து, உணவளிக்கத் தவறியதில்லை. அவர்களும் அவரை அம்மாவென அழைத்து அன்போடு பழகிய உறவு அவருடைய இறப்பு வரை நீடித்தது அவரது விருந்தோம்பும் பண்புக்கு ஒரு சாட்சி.

இறுதிக் காலகட்டத்தில், தான் ஈன்ற புத்திரர் ஐவருக்கும் சந்தோஷமாகத் திருமணம் முடித்து மனநிறைவுடன் மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் நிம்மதியாக வாழ வைத்ததற்கு இன்று நான் கடவுளுக்கு நன்றி நவில்கிறேன். மற்ற சகோதரர்கள எல்லாம் வெளி நாடுகளில் வசிக்க நேர்ந்ததால், எனக்கு மட்டுமே பக்கத்தில் இருந்து அவரைக் கவனித்துக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தது.

ஒரே வீட்டில் இருந்தாலும், வேலைப்பளு காரணமாக சில நாட்களில் அவரது அறைக்குச் சென்று எட்டிப் பார்க்க முடியாமல் போய்விடும். அவ்வேளைகளில்

அவரே வந்து பார்த்து விசாரித்து விட்டுப் போவார். காலை வேளைகளில் walking stick ன் உதவியுடன் வளவு முழுவதும் மெதுவாகச் சுற்றி வருவதில் சந்தோஷம் கண்டார். வெளிநாட்டிலுள்ள என் மற்ற சகோதரங்களுக்கு அனுப்புவதற்கென செய்யும் பலகாரங்களில் எனக்குரிய பங்கு நானில்லாவிட்டாலும் என் மேசைமீது இருக்கும்.

என் அலுவலகமாக அவர் வாழ்ந்த வீடு இருந்ததால், தன் வாழ்க்கைக்குப் பிறகு அந்த வீடு கலகலப்பில்லாமல் பாழடைந்துவிடும் என்ற கவலை தனக்கு இனி இல்லை எனத் தன் கடைசிக் காலங்களில் அடிக்கடி கூறுவார். அலுவலகத்தில் உள்ள அனைவருடனும் அன்பாகப் பழகியதால், அவர்களும் அவரை 'அம்மா, அம்மா' எனப் பாசத்துடன் பழகி தங்கள் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அவருக்கு உடல் நலக் குறைவு எற்பட்ட காலங்களில் எல்லோரும் கூடிவந்து ஒத்தாசை புரிவார்கள். இதனால் வயோதிபக் காலங்களில் பலருக்கும் ஏற்படும் தனிமை என்ற கொடுமை அவருக்கு இல்லாதிருந்தது, அவரது பூர்வபுண்ணிய பலன் என்றே சொல்ல வேண்டும்.

அம்மாவைப் பற்றிநான் யோசிக்கும் போது என் நெஞ்சில் நிழலாடுவது நிழல் தரும் ஆல மரம் தான். அவர் வாழ்க்கை முறை அப்படித்தான் அமைந்தது. அவர் மற்றவரிடத்து உதவி பெற்றதை விட, பிறருக்கு அவர் செய்த உதவிகள் அதிகம். உறவினர், நண்பர்கள் என்று எங்கள் வீடு பலருக்குப் புகலிடமாக இருந்ததென்பதை எவரும் மறுக்க முடியாது. அதற்கு மூலகாரணம் அம்மாவின் அன்பான கவனிப்புத்தானன்றி வேறில்லை

நோயுற்ற காலங்களில் வைத்திய சாலையில் தங்கிச் சிகிச்சை பெறுவது அம்மாவுக்குப் பிடிக்காத விஷயம். பெரும்பாலான சமயங்களில் வீட்டில் வைத்துக் கவனித்தாலும் சில வேளைகளில் தனியார் வைத்தியசாலையில் வைத்திருக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதுண்டு. இம்முறை அநேக முதியோரைக் காவு கொண்ட சிக்கன்குனியா அம்மாவை இரண்டாம் தடவையாகத் தாக்கிய போது அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க நேர்ந்தது. காரில் போகும் போது மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். வார்டில் அனுமதித்து கட்டிலில் படுக்க வைத்த பின் என் கையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருந்தார். என் உள்ளுணர்வு எதையோ உணர்த்தியதன் காரணமாக வழக்கத்தை விட இம்முறை எல்லா வேலைகளையும் ஒதுக்கி விட்டு கூடுதலான நேரத்தை அவருடன் செலவிட்டேன்.

வேலை விஷயமாக கண்டி செல்ல வேண்டிய சந்தர்ப்பத்தையும் நிறுத்திவிட்டு அவரருகில் இருந்தேன். ஆயினும் அதுவரை சுய நினைவுடன் நன்றாகத்தான் இருந்தார். தோடம்பழம் வாங்கி வரும்படியும், கிறேப்ஸ் சாப்பிடலமா என்றும் கேட்டார். என்னை அலுவலகத்துக்குப் போய் மாலை வரும்படி கூறினார்.

ஆனல் எதிர்பாராத விதமாக மூச்சுத் திணறல் ஏற்பட்டு மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரிக்கு மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டது. என் மடியில் படுக்க வைத்துக் கொண்டு போகும் வழியில் 'ஏன் என்னைக் கொண்டு போகிறீர்கள்? எனக்கு என்ன வருத்தம்?'' என்று கேட்டு என் கையைப் பிடித்தார்.

பெரியாஸ்பத்திரியில் நானும் இந்துமதியும் அவரின் இரு பக்கமுமிருந்து அவரைப் பார்த்துக் கெண்டோம். நேரம் செல்லச் செல்ல அவர் வேதனை அதிகரித்தது; நினைவு தடுமாறத் தொடங்கியது. அவர் படும் வேதனையைப் பார்க்க இயலாமல் நான் வெளியே வந்து விட்டேன். இந்துமதி தான் அருகில் இருந்தார். அம்மாவின் இறுதி மூச்சு பிரியும் நேரத்தில் நாங்கள் அனுபவித்த வேதனைகளை எங்கள் இருவரினதும் வாழ்நாளில் மறக்க முடியாது.

படுக்கையில் விழுந்து அழுந்தாமல் தன் உயிர் பிரிய வேண்டும் என்ற அவருடைய ஆசை நிறைவேற இறைவன் கருணை காட்டினலும் இன்னும் கொஞ்ச காலம் அவர் எங்களுடன் இருந்திருக்கலாமே என்ற ஆசை நிராசையாகப் போய் விட்டது.

தான் பெற்ற செல்வங்களுக்கு நல் வாழ்க்கையை அமைத்துத் தந்து, தான் நினைத்ததை சாதித்த அம்மாவாக, மருமக்களுக்கு நல்ல மாமியாராக, பேரன் பேத்திகளுக்கு நல்ல பாட்டியாக உடன் பிறப்புகளுக்கு நல்ல சகோதரியாக வாழ்ந்து தன் கடமைகளை முடித்து மீளாத்துயில் கெண்ட என் அன்புத் தாயின் ஆத்மா சாந்தியடையட்டும்.

ஆசை மகன்

கல்லடி **யோகேஸ்வரன் (சின்னவன்)**

## எங்கள் அம்மா

முற்பிறவியில் நாம் செய்த புண்ணியங்கள், அவற்றுடன் நம் பெற்றோர்கள் நமக்காகச் சேர்த்த புண்ணியங்களால் தான் இப்பிறவியில் நாம் மனிதர்களாக அவதரித்து சிலருக்குப் பாரமாகவும் பலருக்கு உதவிக்கரம் நீட்டுபவர்களாகவும் வாழ்ந்து வருகிறோம். மனிதனாகப் பிறந்து விட்டால் உறவுகள் என்ற வலையும் எம்மைச் சுற்றிவிடுகின்றது. கருவறை முதல் கல்லறை வரையான நமது பயணத்தில சில உறவுகள் பிறப்பாலும், பல உறவுகள் நமது விருப்பினாலும் எம்மை மற்ற மனிதருடன் பின்னிப் பிணைக்கின்றன. பல உறவுகள் நிரந்தரமாக இருப்பதில்லை. அவை இடை வழியே மறக்கப்படுகின்றன, முறிக்கப்படுகின்றன. அவை காலத்தின் நியதி. மற்றைய உறவுகள் நீடித்து நிலைத்தாலும் உறவுக்குரியவர்கள் எம்மை விட்டுப் பிரிந்தவுடன் உறவுகளும் காலப்போக்கில் மறக்கப்பட்டு விடுகின்றன.

ஆனால் தாய் என்ற உறவு என்றும் மறக்கப்படுவதில்லை. அதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் முக்கியமானது நாம் எல்லா நிலைகளிலும் 'அம்மா' என்று அழைப்பதுதான். அந்த வார்த்தையை விடுத்து நாம் என்றுமே தமிழ் உரைக்க முடியாது.

எனது வாழ்க்கைப் பயணத்தில் தந்தையின் உறவை நிறைவாகப் பெறக் கொடுத்து வைக்கவில்லை. இன்னும் சிறிது காலம் அப்பாவின் உறவைப் பெறும் பாக்கியம் பெற்றிருந்தால் என் வாழ்க்கைப் பயணம் வேறு மாதிரி இருந்திருக்கலாம். ஆனால் எனக்குத் தந்தையாகவும் தாயாகவும் இருந்தது என் அம்மா ஒருவர்தான். நான் பல ஆண்டுகள் அம்மாவுடன் தனித்து அந்த அழகிய வீட்டில் வாழ்ந்து இருக்கின்றேன். அந்த காலங்களில் பட்ட எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியிலும், அம்மா தன் கடமையைத்த தவிர வேறு எதையும் அம்மா நினைத்ததில்லை.

சில உறவுகள் எழுத்துருப் பெறுவதால் பெருமை பெறுகின்றன. ஒரு சில உறவுகள் உறவுக்குரியவர்களுக்கு மட்டுமே சொந்தமாகின்றன. அவ்வுறவுகள் தனித்துவமானவை, புனிதமானவை, பாதுகாக்கப்பட வேண்டியவை. அவற்றிற்கு எழுத்து வடிவம் என்பதே கிடையாது. அந்தக் கண்ணோட்டத்துடன் தான் எனக்கும் என்னைப் பெற்றெடுத்து , என்னை மனிதனாக்கிய தாய்க்கும் உள்ள உறவை என்னால் பார்க்க முடிகிறது.

இனிய மகன்

U.K **சுரேந்திரன்**

## இனிமையான, மறையாத, மறக்காத நினைவுகள்

அன்புத் தந்தையின் மீளாத்துயில் தந்த அகலாத் துயரத்திலும் எம்மை அரவணைத்து, தாயும் தந்தையுமாகித் தரணியேல்லாம் போற்றும் வண்ணம் எம்மைத் தரமுயற்றி, நல்தாரமும், நல்வாழ்வும்அமைந்திட தன் வாழ்வை அர்ப்பணித்த எங்கள் அன்னைக்கு இந்நினைவுகள் சமர்ப்பணம்!

அம்மா, என் கடந்த 44 வருட கால வாழ்க்கையில் உங்கள் பங்கினை அசை போட்டுப் பார்க்கிறேன். எத்தனையெத்தனை இனிய, மறையாத, மறக்காத நினைவுகள்!

சிறுவயதில் அன்பான குடும்பமாக அப்பாவின் அன்பு, அம்மாவின் அரவணைப்பு, அண்ணணமாரின் கவனிப்பு என சுமையின்றி சதந்திரமாகச் சுற்றித் திரிந்த நாட்கள்; அப்பாவுடனும் உங்களுடனும் பாடசாலைக்கு காரில் சென்று வந்த காலங்கள்; விடுமுறை தினங்களில் உன்னிச்சை வயல், முனைக்காடு, தாத்தாமலை என ஆனந்தமாக சென்ற சுற்றுலாக்கள்; இன்னும் எத்தனையோ நிகழ்வுகள் இன்றும் மனதில் நினைத்தாலே இனிக்கிறது.

தினந்தினம் நம் வீட்டுக்கு வரும் விருந்தினர், உறவினர், அப்பாவின் வழக்காளிகள் என எவர் வந்தாலும் உங்கள் இன்முக வரவேற்பும், உபசரிப்பும், விருந்தோம்பலும் எனக்கு இளமையிலேயே எல்லோரிடமும் அன்புடன் பழகும் பாடத்தைக் கற்றுக் கொடுத்தது.

அப்பாவுக்கும் உங்களுக்கும் இடையிலிருந்த அன்பு, பாசப் பிணைப்பு, மதிப்பு, மரியாதை என்றுமே எனக்கு அதிசயமான அனுபவம் தான். நீங்களிருவரும் என்றும் வாக்குவாதப் பட்டதையோ உரத்த குரலில் பேசியதையோ நாங்கள் கண்டதில்லை. பின்வந்த நாட்களில் நான் அந்த இரகசியத்தைக் கேட்ட போது உங்களின் கனிவான சிரிப்பும், கூடவே அப்பாவின் நினைவால் கண்கலங்கியதும், இன்றும் என் மனதில் ஈரமாக இருக்கிறது.

எம் வீட்டு வெண்மணல் தான் எமது சிறுவயது பள்ளிக்கூடம், விளையாட்டு மைதானம், குடும் ஒன்று கூடல், அரட்டை அரங்கம், இன்னும் பல...., ஆனால் அதே இடம் பலரது குடும்ப வழக்குகளை நீங்களும் அப்பாவுமாக தீர்க்க உதவியதை மறக்க முடியுமா? தினமும் தேங்காய் திருடிய கள்வனை அப்பா பிடித்த போது, நீங்கள் உணவு கொடுத்து, பணமும் கொடுத்து அறிவுரையும் கூறி அனுப்பியதும், பறங்கி ஓடாவிப் பையன் நல்லார் மகனை அடித்து வெட்டிவிட்டு

ஓடிவந்து நம் வீட்டில் ஒளிய, துரத்தி வந்தவர்கள் வீட்டைச் சுற்றி வந்து அவனை வெளியில் அனுப்பும்படி ஆவேசத்துடன் கோஷமிட, பொறுமையுடன் அவர்களோடு பேசி சமாதானப் படுத்தியதும் அயலவர்களுடனான அக்கறை, சமுதாயத்தில் உங்கள் ஈடுபாடு எனப் பலவற்றையும் எனக்கு உணர்த்தியது. சமுதாயத்தில் உங்கள் கௌரவமும், சுற்றியுள்ளோர் உங்களிருவர் மீதும் கொண்டிருந்த மதிப்பும் என்றுமே என்னைப் பிரமிக்க வைத்த விஷயங்கள்.

அம்மா, இறுதிக் காலம் வரை நாள் தவறாது பைபிள் படித்து ஜெபிக்கும் பழக்கம், மஞ்சந்தொடுவாய் மெதடிஸ்த ஆலயப் போதகர், உங்கள் தோழி அமரர் மகேஸ் அன்ரி போன்றோர் வீட்டுக்கு வரும் வேளைகளில் சேர்ந்து ஜெபிக்கும் வழக்கம் உங்கள் ஆழமான ' உறுதியான மெதடிஸ்த சமயப் பற்றினை எனக்கு வெளிப்படுத்தியிருக்கிறது. நான் பாடசாலையில் வேதசமயம் படித்த போதும் உங்களுடன் சேர்ந்து பிரார்த்திக்கும் படி நீங்கள் என்றும் என்னை வற்புறுத்தியதில்லை. எந்தக் கடவுளானாலும் உண்மையும், பயபக்தியும், நம்பிக்கையும் வேண்டும் என்ற உங்கள் போதனை என்றும் என் மனதில் போதிமரமாக நிற்கும்.

இளமையில் அப்பாவின் மறைவு எல்லோருக்குமே ஒரு பேரதிர்ச்சி. அச்சமயம், அதன்பின்பு நீங்கள் பட்ட வேதனைகளை, அடைந்த துயரங்களை, அனுபவித்த கஷ்டங்களை எல்லாம் நினைத்தால் இன்றும் என் கண்களில் நீர் துளிர்க்கிறது. எத்தனை காலங்கள் தனிமையில் அவரை நினைத்துக் கண்ணீர் விட்டிருப்பீர்கள்; எத்தனை வருடங்கள் தினமும் அவர் உருவப் படத்துக்கு மாலை தொடுத்துப் போட்டிருப்பீர்கள். ஆனாலும் அந்தத் துயரத்திலும் எங்களுக்கு அன்பு காட்டி, அரவணைத்து தாயும் தந்தையுமாகி பொறுப்புடன் எங்களுக்கு நல்வழி காட்டினீர்கள்.

அப்பாவின் மறைவுக்குப் பின்பு நாம் மகிழ்ச்சியின் மறுபக்கத்தை அனுபவத்த போது அதிகாலையில் எழுந்து, வீட்டு வேலைகளில் உங்களுக்கு உதவி, சந்தைக்குச் சென்று உங்களுடன் வயல், கடை எனப் பல இடங்களுக்கும் வழித் துணையாக வந்து, நாட்குறிப்பு, கணக்குவழக்கு எழுதுதல் என இளமையில் உங்களுடன் சேர்ந்து பெற்ற அனுபவங்கள் இன்று என்னை ஒரு பொறுப்புள்ள மனிதனாக்கியிருக்கின்றன.

அந்தக் கஷ்டமான காலகட்டத்தில், நீங்கள் கண்ணீர் மல்க “மக்காள், நீங்கள் நன்றாகப் படித்து நல்ல நிலைக்கு வந்தால் இன்று நம்மை ஒதுக்குபவர்கள் நம்மை நாடி வருவார்கள்” என்று சொன்னது என் கண் முன்னே நிற்கிறது. அது எவ்வளவு தூரம் உண்மையென்பது இப்போது புரிகிறது.

நான் O/L பரீட்சையில் நற்பேறு பெற்று கல்லடி பள்ளிக்கு வந்து உங்களிடம் சொன்னபோது, கட்டியணைத்து உங்கள் பள்ளி அதிபர், ஆசிரியரிடம் சொல்லி மகிழ்ந்ததையும், நான் பொறியியலாளரானவுடன், வீட்டுக்கு வந்தவர்களிடமெல்லாம் “என் கடைக்குட்டி Engineer” என வாயாரப் புகழ்ந்ததையும் எப்படியம்மா மறப்பேன்?

கலாசாலை விடுமுறைக் காலத்தில் ஒரு தடவை சந்தைக்குச் சென்று வரும் வழியில் அங்கு நடந்த படுகொலைகளில் நான் மாட்டிக்கொண்டு, மாற்றுப் பெயர் சொல்லித் தப்பி வந்த போது வாசலில் நீங்கள் அழுது கொண்டு நின்றதையும், இரவு வேளைகளில் ஆர்மியின் சுற்றி வளைப்பு, வீட்டுச் சோதனை என நான் பயந்த போது “நான் விழித்திருக்கிறேன், நீ தூங்கு” என்று எனைப் பாதுகாத்ததையும் எணணும் போது உங்கள் அன்பின் ஆழம் புலப்படுகிறது.

ஒரு கால கட்டத்தில் நான் குறிக்கோள் எதுவுமின்றி அலைந்த போது, அன்பாக, அமைதியாக பலரையும், குறிப்பாக அண்ணாச்சி, குஞ்சுத்தம்பி, சிவக்குமர், நவம் அண்ணன் போன்ற சிவில் எஞ்சினியர்களைப் பெருமையாக உதாரணம் காட்டி என்னை நல்வழிப் படுத்தியது இன்று என் மனதில் பசுமரத்தாணி போல் இருக்கிறது.

நினைப்பதெல்லாம் நடப்பதில்லையென நான் உணர்ந்த போதும், தனியாக எம்மண வாழ்வுப் பயணம் தொடங்கிய போதும், நாடுவிட்டு நாங்கள் சிங்கப்பூருக்கு குடிபெயர்ந்த போதும் வாரம் தவறாமல் தொடர்பு கொண்டு கூறிய ஆறுதல் வார்த்தைகளுக்கு எதுவும் ஈடாகுமா? அன்பு மகள் சுருதி பிறந்த போது உடனிருந்து உதவியதையும் சுருதியைப் பறிகொடுத்து கதிகலங்கி நின்ற போது கனிவுடனே தேற்றியதையும் வாழ்வுள்ள வரை மறக்க முடியுமா அம்மா?

உங்கள் தள்ளாத வயதினிலும் நாம் அங்கு விடுமுறையில் வரும் போதெல்லாம் அன்புடனும் ஆசையுடனும் வரவேற்று, சங்கிற், நவநிற்றை அரவணைத்து உச்சி முகர்ந்து எமக்குப் பிடித்ததைச் சமைத்து, செலவுக்குப் பணம் தந்து

உபசரித்ததை என்றுமே மறக்க முடியாது. நீங்கள் றஜனியை ‘மகளே’ என அன்புடன் அழைத்ததையும், றஜனியை மட்டுமல்ல மற்ற மருமக்களையும் மகள்களாகவே நடத்தியதையும் உங்களுடன் பழகிய அனைவரும் அறிவர்.

உங்களின் எண்பதாம் ஆண்டு பிறந்த நாள் விழாவும், 2005 ம் ஆண்டு 29 வருடங்களுக்குப் பிறகு நாமெல்லாம் ஒன்று கூடியதும் என் உயிருள்ளவரை என் மனதை குளிரவைக்கும் இனிய நினைவுகள்.

உங்கள் உறுதியான, வெளிப்படையான பேச்சும், செயலும், கடைசி வரை யாருக்கும் பாரமாகவும் இருக்கக் கூடாது என்ற உறுதியான கொள்கையும் அப்படியே வாழ்ந்து மங்களமாய் மறைந்ததுவும் என் மனதில் உங்களைப் பற்றிய உறுதியான நினைவுகள்.

அம்மா, 44 வருடங்களாக என்னை வழிகாட்டிய உங்கள் அன்பும், பண்பும், அறிவுரைகளும், நினைவுகளும், ஆசியும் இனி வரும் காலமெல்லாம் என்னையும் என் குடும்பத்தையும் தொடர வேண்டும். நான் என்றென்றும் உங்கள் அன்பு மகனாக வாழ இறைவன் அருள் வேண்டும்

நீங்கள் எப்போதும் எங்கள் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

செல்ல மகன்

சிங்கப்பூர் **குட்டி (சத்தியேந்திரா)**



## மாமி – மருமகள் உறவு

“மருமகள்” – தமிழில் இந்த வார்த்தைக்கு அர்த்தம் பல. அண்ணன் மகள், தம்பி மகள், மைத்துனி மகள் போன்ற பிறந்த வீட்டு உறவுகளும், மகன் மனைவி என்ற புகுந்த வீட்டு உறவும் இதில் அடக்கம்.

என் மாமிக்கும் எனக்குமான உறவு, பிறந்த வீட்டு உறவில் ஆரம்பித்து புகுந்த வீடு வரை தொடர்ந்தது என்பது உண்மை. பிறந்த வீட்டுறவுக்கும் புகுந்த வீட்டுறவுக்கும் இடையே எதிர்பாராவகையில் ஒரு சிறு இடைவெளி துாரதிர்ஷ்ட வசமாக எற்பட்டு விரிசல் கண்டிருந்தாலும் புகுந்த வீட்டுறவு உறுதிப் படுத்தப்பட்ட கணமே இடைவெளி சாத்தப்பட்டு இறுதி வரை பலமாக நிலைத்திருப்பது என் அதிர்ஷ்டமே!

என் முதல் பிரசவத்தின் போது, தாயில்லாக் குறையை நிவர்த்தி செய்யக் கடல் தாண்டி ஆபிரிக்கக் கண்டம் பயணித்து வந்து, மாமி செய்த உதவிகளை இன்று நன்றியுடன் நினைவு கூருகின்றேன். பெண் குழந்தையில்லாக் குறையைத் தீர்க்க, முதல் பேரக் குழந்தை பெண்ணாக அமைந்தது கண்டு அவரடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

தன் தையல் திறமையைப் பயன்படுத்துவதற்கென பேத்தி பிறந்ததும் அவரது மகிழ்ச்சிக்குக் ஒரு காரணமாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. ஏனெனில் தையல் கலை அவருக்கும் பிடித்தமானதொரு பொழுதுபோக்கு. தன் பேத்திக்கென விதவிதமாக குட்டிச் சட்டைகள் தைத்துக் கொண்டு வந்திருந்தார். இந்தப் பொது ரசனை (common interest) எங்களிருவரையும் இணைக்கும் பாலமாக இருந்தது.

உற்ற துணையை இழந்த பின் அவர் கவலையை மறக்க உதவிய தருணங்களுள் கற்பகத்தின் பிறப்புமொன்று. அதே போல அவர் மனம் குளிர்ந்த இன்னொரு தருணத்தையும் இங்கு நான் குறிப்பிட வேண்டும்.

அவருக்கு மணமாகி ஏறக்குறைய 35 வருடங்களுக்குப் பின்னர் தனது மாமியாரை முதன்முதலாக உபசரிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. தன் கணவரை இழந்து பத்து வருடங்களுக்குப் பிறகு அவருடைய மாமியாரும் இளைய மைத்துனியும் வீடு தேடி வந்து சில நாட்கள் அவருடன் தங்கியிருந்த போது அவர்களுக்கு விதவிதமாகச் சமைத்துப் போட்டார். அப்போது எனக்கு எழுதிய கடிதத்தில், அவர் புளகாங்கிதத்தோடு எழுதிய “மின்னா, இப்போது நான் மாமியார்

மெச்சிய மருமகள்'' என்ற வரிகளை என்னால் மறக்க முடியாது. ''மாமியாரும் ஒரு வீட்டு மருமகள் தான்'' என்ற கூற்றை அது நிரூபித்தது. எங்கள் மாமி- மருமகள் உறவில் நெகிழ்ச்சி ஏற்படுத்திய தருணம் அது.

இருபத்து நாலரை வருடங்கள் மாமி அனுபவித்த மகிழ்வான மணவாழ்க்கை, பல நூறு ஆண்டுகளுக்குச் சமமாகும் என்பது என் கருத்து. அவர்கள் வாழ்ந்த ஒற்றுமையான வாழ்க்கை, இன்று அவர் பெற்றெடுத்த ஐந்து மைந்தர்களிலும் எதிரொலிப்பதைப் பார்த்து மூத்த மருமகள் என்ற முறையில் பெருமையடைகிறேன். இந்த ஒற்றுமை வரும் தலைமுறைகளிலும் தொடர்வதற்கு அவர்கள் ஆசியை வேண்டி நிற்கிறேன்.

தன் மூத்த மருமகள், பின்னால் வந்த மற்ற நான்கு மருமக்களுக்கும் முன்னுதாரணமாக இருக்கவேண்டுமென்ற தன் ஆசையை அடிக்கடி வெளிப்படுத்தும் போது அதற்கு நான் தகுதியானவள் தானா என்று யோசிப்பதுண்டு. அவர் மறைவுக்குப் பின், என்னைப் பற்றி அவர் கொண்டிருந்த நல்லபிப்பிராயங்களை பிறர் கூறக் கேட்ட போது எனக்குப் புல்லரித்தது.

ஆங்கிலத்தில் 'aging gracefully' என்று சொல்வார்களே, அதைக் கண்கூடாக என் மாமியில் பார்த்தேன்; அனுபவ பூர்வமாக அவர் மூலம் உணர்ந்தேன் என்றால் மிகையாகாது. அவருடைய பல நற்பண்புகளில், அவருடைய வெளிப்படையான பேச்சும் (- சில வேளைகளில் மனக்கஷ்டத்தைக் கொடுத்தாலும்) , விருந்தோம்பும் பண்பும் என்னைக் கவர்ந்தவை. எல்லாவற்றுக்கும் மேலாக தன் ஐந்து மருமக்களையும் பாரபட்சம் காட்டாது அவர் நடத்திய விதம், இறுதிக் காலத்தில் அவர்பால் எனக்கு பெரு மதிப்பைத் தோற்றுவித்தது. இதில் மற்ற நான்கு மருமக்களுக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

கடந்த ஒரு வருடமாக, வாரமொரு முறை தொலைபேசியில் ஒலிக்கும் ''என்ன மருமகளே'' என்ற குரலைக் கேட்காமல் மனது கனத்தாலும், இவ்வுலகில் தனக்கு விதிக்கப்பட்ட கடமைகள் யாவற்றையும் செவ்வனே முடித்த திருப்தியுடன் சென்ற அந்த ஆத்மாவுக்குக் கிட்டிய மங்கலச் சாவுக்காக ஆண்டவனைத் துதிக்கின்றேன். 32 வருடங்களாக உடலால் பிரிந்திருந்த துணையுடன் திரும்ப இணைவதற்காக அவரை அழைத்துச் சென்ற இறைவனுக்கு நன்றி நவில்கின்றேன்.

மேலுலகிலிருந்து எம்மையெல்லாம் இருவரும் தம்பதி சமேதராக ஆசீர்வதித்துக் கொண்டிருப்பார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை.

**South Africa** **மிருணாளினி சாந்திகுமார்**

## உங்கள் பிரிவால் வாடுகிறோம்

ஓராண்டு ஓடிவிட்டது, ஊரில் நீங்கள் இருக்கிறீர்கள் என்ற தைரியம் நம்பிக்கை என்பவற்றை சூனியமாக்கி கவலையில் ஆழ்த்திவிட்டு போய்விட்டீர்கள். எங்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது, புத்திமதிகள் ஆசீர்வாதங்கள் பிரார்த்தனைகள் அத்தனையும் கிடைக்கும் என்ற நம்பிக்கைக்கு இடைவெளி ஏற்படுத்தி விட்டீர்கள் மாமி!

ஆதித்தன் தனித்து விடுவான் அவனுக்கு சகோதரம் வேண்டும் என்று அடிக்கடி கூறி அதற்காக மன்றாடினீர்களோ, அவனுக்கு தங்கை மீனாட்சி கிடைக்க . நன்றி மாமி!

உங்களை ஊருக்கு வந்து பார்த்து விட்டு திரும்பி வந்து மீண்டும் தொலைபேசியில் பேசும் போது "எப்ப என்னை வந்து பார்க்க போகிறீர்கள்" என்று கேட்பீர்கள் பதிலுக்கு "இப்பதானே வந்து போனோம்" என்றால், "வெகுகாலம் இருப்பேனோ" என்பீர்கள், பதிலுக்கு "மேலே வந்து பார்க்கிறோம்" என்றதும் சிரிப்பீர்கள் மாமி!

"உங்கள் மகன்" என்று குறிப்பிடும் போது கலியாணம் கட்டியபின் மனைவிக்குத்தான் அம்மகன் சொந்தம் என்று குறிப்பிட்டீர்கள். ஏன் மாமி?

இவ்வுலகில் இருக்கும் வரைக்கும் உங்கள் பிரார்த்தனைகள் ஆசீர்வாதங்கள் எங்களுக்கு தினமும் வேண்டும்- அங்கு விண்ணுலகில் நாங்களும் உங்களுடன் வந்து சேரும் வரை.......

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்

அவுஸ்திரேலியா **பார்வதி ரவிவர்மன்**

# மாமியுடன் என் நாட்கள்

நான் என் மாமியை 1982ம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணம் மத்தியஆஸ்பத்திரியில் முதன் முதலாகச் சந்தித்தேன். அவரை ஒரு ஆசிரியையாக வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையில் அறிந்திருந்தாலும் ஏற்படப்போகும் மாமி மருமகள் உறவுமுறையில் அவரைச் சந்தித்தேன் அதன் பின் 1986ம் ஆண்டில் மாமியின் விருப்பத்தின் படி கல்லடி வீட்டிற்கு வரத்தொடங்கினேன். ஒன்றுவிட்டு ஒன்று சனி ஞாயிறு வந்து தங்குவேன் திங்கள் அதிகாலை நான் வேலைக்குப்போவதற்காக பஸ்சில் ஏறும்வரை ரோட்டில் நின்று நான் ஏறும்வரை வழியனுப்பி வைப்பார். எத்தனையோ பெடியனுகளுடன் கலகலப்பாக இந்த வீட்டில் நானும் மாமியும் அப்போது உதவிக்கு இருந்த மீனாவும் வாவாவும் இருப்போம் சுரேன் குட்டி சரத் பல்கலைக்கழக விடுமுறைக்கு வருவார்கள் காலையில் மாமி நேரத்துடன் எழுந்து வளவு முழுவதுமாகக் கூட்டி வருவதைப்பார்த்து வியர்ந்து இருக்கின்றேன். எங்கு பார்த்தாலும் வெள்ளைமணல் அழகாக இருக்கும். நான் அங்கு இருக்கும் போது இவரிற்கு வீட்டு வேலைகளில் இனைந்து ஓரளவு ஓய்யு கொடுத்தேன் என்றுதான் சொல்லவேண்டும். பழைய படங்கள் என்றால் அவவுக்குப்பிடிக்கும். எனவே பளைய படக்கசட் எடுத்துக் கொடுத்து நான் சமையல் வேலைகளை முடித்துவிட்டு வரும்வரை பார்க்கச்சொல்வேன். மாமிக்கே உரித்தான இரவில் வெளிவிராந்தையில் இருந்து கதைத்திருப்பார். அவர்கள் காலத்து ஊர்க்கதைகளை சொல்வார். 5ம் ஆண்டு பிள்ளைகளினதும் இழமைக்கால குழப்படிகளைச் சொல்வார்.

மாமியிடம் எத்தனையோ நல்ல விடயங்களைக்கண்டு இருக்கின்றேன் முதன் முதல் அவரைச் சந்திப்பவர்கள் அவரின் கண்டிப்பு போன்ற கதையைப்பார்த்து பயப்படுவார்கள் ஆனால் பிறகு சந்திக்கும்போது உரிமையுடன் பழகுவர் இரவில் தாமதமாக நித்திரைக்குப் போனாலும்கூட நேரத்துடன் எழும்பிவிடுவார். அவருடைய ஒவ்வொரு வேலையும் நேரம் தப்பாது ஒழுங்குமுறையில் செய்துவருவார். ஒருநாளும் மற்றவரைப்பற்றி குறை கூறமாட்டார். ஒருவரில் குற்றமிருந்தாலும் அவ்வேளையில் அவருக்கு என்னபிரச்சினையோ என்று யோசிப்பார். எவரையும் ஆதரிக்கும் தன்மையும் எவருக்கும் உதவி செய்யவேண்டும் என்ற எண்ணமும் அதிகமாக இருந்தது. தன்னால் முடியாவிட்டாலும் தன் பிள்ளைகளை உதவிசெய்யும்படி

வற்புறுத்துவார். வீண் பொழுது கழிக்காது எந்தநேரமுமம் ஏதாவது வேலைசெய்துகொன்டே இருப்பார் உங்கள் வயதுவரும்வோது எங்களால் இப்படி வேலைசெய்யமுடியாது மாமி என்றுசொல்வேன். அவரால் அதிகமாக எழும்பி நடக்க முடியாத நிலையில் அதிக நேரத்தை தையல் வேலைகலில் செலவழித்தார். அழகாக வெட்டுக்கழுத்து வடிவங்களைத் தைப்பார் மாமி செய்யும் முந்திரியம் பருப்புப் பலகாரம் போல் மற்றவர்கள் செய்யமாட்டார்கள் பனம்பழக்காலத்தில் எனக்கு பனம்பானியும் பனங்காய்ப்பலகாரமும் செய்து தருவார்.

ஓவ்வ வருடமும் மாமியிடந்தான் புதவருடப்பிறப்பு கைவிசேடம் வாங்குவேன். ராகுலன் அப்பம்மாவின் காலில் விழுந்து வணங்கி கைவிசேடம் வாங்குவதற்காகக் காத்திருப்பான்.

பிறப்பவர் எல்லாம் இறப்பது திண்ணம் மாற்றமுடியாதது ஆனாலும் மாமியின் இழப்பு எதிர்பாராதது. தான் வாழ்க்கையில் எல்லா சந்தோசங்களையும் அனுபவித்து விட்டேன் பிள்ளைகளின் நல்வாழ்க்கையும் பார்த்து விட்டேன் இனிமேல் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழ்ந்து நானும் கஷ்ட்டப்பட்டு மற்றவர்களையும் கஷ்ட்டப்படுத்தாமல் போய்விடவேண்டும் என்று சொல்வார். அவர் விருப்பப்படியே அவர் வாழ்க்கையும் முடிந்தது வைத்தியசாலைக்கு போகும் போது அல்லது பின்னரோ கூட அவர் திரும்பி வரமாட்டார் என்னு எதிர்பாராத நிலையில் நோய் அதிகரித்து அவர் உயிர்பிரிந்த நிலைதான் கஷ்ரமாக இருந்தது.

கல்லடி **இந்துமதி யோகேஸ்வரன்**

## எங்கள் அம்மா

என்று நான் என்னைப் பெற்றெடுத்த தாயின் உறவுக்கு நிகரான உறவை, என்னைப் பெற்றெடுக்காத என் மாமி என்ற உறவில் கண்டேனோ, அன்றே அவரும் என்னைப் பெற்றெடுக்காத தாயானார். நான் அவரைப் பார்த்துப் பழகிய காலங்கள் குறுகியதானாலும் அவை என்றென்றும் மறக்கமுடியாதவை. அவர் என் மேல் வைத்திருந்த மதிப்புக்கும் மரியாதைக்கும் முக்கியமாக அன்பிற்கும் மதிப்பழிப்பதற்காக அந்த நீனைவுகளை எனக்குள்ளேயே வைத்திருக்க விரும்புகிறேன். அதனால் தான் அவற்றை எழுத என் கைகளுக்குச் சக்தி வரவில்லை.

U.K **ரதிமலர் சுரேந்திரன்**

## அன்புள்ள அம்மாவுக்கு

இப்படித்தான் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு வாரம் தவறாமல் உங்களுக்கு எழுதுவோம். தொலைபேசி வசதிகள் வந்த பின்பு கடிதம் எழுதுவதை நிறுத்திக் கொண்டோம். இன்று இப்படியொரு கடைசிக் கடிதம்.

ஆனாலும், நீங்கள் இன்னும் கல்லடி வீட்டில் இருப்பதாகத் தான் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். எத்தனையோ தடவைகள் முக்கிய செய்திகளை உங்களுக்குச் சொல்ல தொலைபேசியை எடுக்க நினைத்து மறுகணம் நிஜத்தை ஜீரணிக்க முடியாமல் கலங்கிப் போகிறேன்.

நீங்கள் எனக்குக் கிடைத்த மூன்றாவது தாய். கடவுள் எல்லோருக்கும் இப் பாக்கியத்தைக் கொடுப்பதில்லை. என்னைப் பெற்றெடுத்த முதல் தாய், சிறு வயது முதல் எனக்குப் பாசமூட்டி பாடம் சொல்லிக் கொடுத்து வளர்த்தது இன்னொரு தாய், திருமண பந்தத்தால் எல்லாருக்கும் கிடைப்பது ஒரு மாமியார், ஆனால் எனக்குக் கிடைத்ததோ மற்றொரு தாய்.

1986ம் ஆண்டில் ஒரு நாள், நான் குட்டியைப் பார்க்க வந்தபோது கல்லடி வீட்டில் உங்களை முதன்முதலில் சந்தித்தேன். அதுவரை பார்த்திராத என்னை உபசரித்து சாப்பிட்டுப் போகும்படி வற்புறுத்தியது எனக்கு அப்போது பிரமிப்பை ஊட்டியது. உங்களை கடைசியாகச் சந்தித்தது 2005 ல். திருமணமொன்றில் கலந்து கொள்ள வந்த என்னைப் பார்க்க வந்திருந்தீர்கள். உடம்பில் வலுவிழந்திருந்தாலும் பேச்சு தோரணையில் அதே கம்பீரம், நம்பிக்கை, தைரியம் என்று எல்லாமே தெரிந்தது. இதனிடையே எத்தனையோ மறக்க முடியாத இன்பதுன்பங்களைப் பகிர்ந்து கொண்டோம். உங்களோடு தொடர்ந்து ஒன்றாக இருக்கக் கிடைக்காதது துர்ப்பாக்கியமே.

குட்டியையும் என்னையும் முதன்முதலில் பார்க்க வந்தது நினைவில் இருக்கிறது. காதல் மாங்கனி தொடக்கம் கஜூ பலகாரம் வரை எத்தனையோ சாமான்களுடன் வந்தீர்கள். அதைவிட கோழிப் பால் பொரியல், லீக்ஸ் முட்டைப் பிரட்டல் என்று விதவிதமாகச் சமையல் செய்து தந்து, அவற்றை சமைக்கவும் சொல்லித் தந்தீர்கள்.அந் நாட்கள் மீண்டும் வராதா என்று மனம் ஏங்குகிறது.

அதன் பிறகு புத்தளத்தில் சில நாட்கள் எங்களுடன் வந்து தங்கியிருந்தீர்கள். அங்கு ஒருநாள் குட்டி விளையாட்டாக வீசிய துவாய் கண்ணில் பட்டு என் கண்கலங்கியதைக் கண்டு, குட்டி என்னை அழ வைத்து விட்டதாக நினைத்து மனம் குழம்பி நீங்கள் குட்டியைக் கடிந்து கொண்டதும், உண்மையைப் புரிய வைக்க நாங்கள் பட்ட பாடும் நினைவுக்கு வருகிறது. மருமகள் கண்கலங்கியதற்காக மகனைக் கடிந்து கொண்ட உங்களைப் பார்த்து பிரமித்துப் போனேன் அன்று.

குட்டி சிங்கப்பூர் போனபிறகு எனக்குத் துணையாக சொந்தபந்தமற்ற புத்தளத்தில் வந்து தங்கியிருந்தீர் கள். சாதாரணமாக நீங்கள் சைவக் கோயிலுக்குப் போகாதவராக இருந்தாலும் கூட பிள்ளையார் விரத நாட்களில் அருகிலுள்ள பிள்ளையாரைக் கும்பிடுவதற்கு torch light உடன் என்னுடன் துணைக்கு வந்ததை மறந்திருக்க மாட்டீர்கள்.

சுருதி பிறந்த பொழுது நாங்கள் மீண்டும் ஒன்றாக இருக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. கணக்கிலடங்காத பல வண்ண டிசைனில் சின்னச் சட்டைகளுடனும் பத்தியச் சாமான்களுடனும் வந்திருந்தீர்கள். அவற்றைப் பார்த்த போது எங்களை விட நீங்கள் சுருதியை நினைத்து எதிர் பார்த்திருந்ததாக எனக்குத் தோன்றியது. “நானும் உங்கள் தாய் மாதிரி தான், என்னில் என்ன வெட்கம்” என்று சொல்லி தாய்

மாதிரி இல்லாமல் தாயாகவே இருந்து என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். அதை மாதிரி முதலில் என்னை 'எழில்' என்று அழைத்தாலும் , பின்பு 'மகளே' என்று தானே அழைத்தீர்கள்.

இப்படி மறக்க முடியாத நினைவுகளை, உங்களை அண்ணாந்து பார்த்த நிகழ்வுகளை அடுக்கிக கொண்டே போகலாம். தனியொரு தாயாக இருந்து பிள்ளைகளை வளர்த்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்தீர்கள். வாழ்க்கையை நம்பிக்கையோடும் மனஉறுதியோடும் எதிர் கொண்டு வெற்றி கொண்டீர்கள். அதே போல நீங்கள் எதிர் பார்த்த மற்றவர்களை கஷ்டப் படுத்தாத மரணத்தையும் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்டீர்கள். உங்களை என் வாழ்க்கையில் சந்திக்கக் கிடைத்தது என் அதிர்ஷ்டமே.

அம்மா, நீங்கள் இருந்த போது எங்களை ஆசீர்வதித்து வழி நடத்தியது போலவே, தொடர்ந்தும் வழி நடத்துங்கள். தன் கஷ்டம் பாராது தன் பிள்ளைகளுக்காக தன்னை முழுதாக அர்ப்பணித்த நீங்கள் ஒரு அற்புதத் தாய்.உங்கள் ஐந்து மகன்களுக்கு மட்டுமல்ல எனக்கும் என்றென்றும் நீங்கள் ஒரு அனபுத் தாய்.

சிங்கப்பூர் **எழில்றஜனி சத்தியேந்திரா**

## Appamma – My Inspirational Grandmother

The fondest memories I have of Appamma was the time she came to stay with us in South Africa in 1996. Although relatively old at that time, you would never be able to say it. I remember going to school and we would come back everyday to lunch that Appamma had spent the entire mornings cooking for us. I think Tuesdays and Fridays were the most challenging for her because she found it very difficult to cook the vegetables without a little *kooni* or dry fish

or maldive fish added to it to enhance the flavour which is the typical Batticaloa way of cooking!

During my Arangetram in 1999, Appamma ensured that everyone in the house (and god knows there were tons of people that came in and out) was entertained and fed. She was always in the kitchen cooking or making tea etc. Appamma had a very generous nature and always gave everyone as much as she could, without holding back. This especially applied when it came to her sons and her grandchildren. Every time someone went to Sri Lanka she would send us a whole lot of sweetmeats. Appa always got a packet of cashew nuts that he would try his best to hide from us. When we complained to Appamma about this she would say that she sent those especially for her son!

She was greatly loved and respected by her sons who stood true to her till the very end of her life. Although they all wanted her to live with them she always wanted to stay in the house Appappa built and I'm glad that she passed on from there. She never wanted to be a burden to any of her sons and always wanted to be independent and she managed to do this till the end of her life. Her life has inspired me in so many ways and I am thankful to God for giving me a wonderful woman as a grand mother.

I wish we could have spent more time with her and gone to visit her more often but that was not always possible. Nonetheless, I'm glad we got to spend a little time with her when she came to South Africa on two separate occasions. We got to experience her jovial and adventurous nature when we went traveling around South Africa with her. Although she found it difficult to walk long distances sometimes, she was always game to do everything.

As her eldest grand child and the only grand-daughter until little Suruthy was born, I had the privilege of being her favourite one for a long time. Since my maternal grand mother passed away long before I was born it was Appamma who played both the roles in my life and I dearly cherish her memories.

May God bless her soul.

South Africa **Katpaham Shantikumar**

## Tribute to a Loving Grandmother

Appamma, as we lovingly called her, was the most prominent grandparent in my life. My earliest memory of her was when she came to visit us in South Africa in 1996. I was 10 years old, and I vaguely remember that first moment we were in her presence. We embraced for the first time (that I could remember) and I couldn't explain it at the time, but looking back I now understand exactly what was happening. It was a simply, an intense, loving bond shared between a Grandmother and her grandson

During her trip in 1996, Appamma taught us Tamil, and the surprising part was we weren't resistant to learn. Amma had tried for so many years to get us to learn it, but we were always uncooperative. We really did enjoy her lessons. I suppose it was because Appamma was a teacher by profession. And to my knowledge, we were her last pupils which is something I'll always cherish.

I personally am very honoured to have been part of her life. She was truly a role model to me. Especially now, knowing of her accomplishments. After Appappa died, she raised five boys into successful men. A feat not many can accomplish. Though there were hardships, all the sweat, blood and tears paid off. Not only are my uncles and my father successful in terms of their careers, but all the values, morals and principles that were instilled in them by her, are still intact! And that has been passed onto our generation and will surely be passed onto the generation after.

Being her eldest grandson, I feel more inclined to live up to everything she expected of me. To live by the morals and values she expects me to live by. And one day I will look back on my life, look up and say “Its all thanks to you Appamma”. Because I know she is watching over me, guiding me to always take the right path!

Rest in Peace Appamma,

South africa **Kumaran Shanthikumar**

## A Tribute to my Appamma

My earliest memory of Appamma was of her teaching me Tamil when she came to Mafikeng. We were sitting at the dining room table with my books. The memory is very fuzzy as I was only 8 years old then. All I remember was that I was not very happy to be there because I was very reluctant to learn.

I remember the last time I spoke to her. It was on her birthday last year. The conversation started with me saying

‘Happy Birthday’ in my best Tamil accent. She then replied, ‘Thank you, thank you, “Enna seykirai Mahane?” I was pretty much up the river without a paddle at this point. The conversation being the river in this metaphor and the paddle being my Tamil or lack of it. I tried my best to string a few random words together, but to no avail. I ended up just passing the phone to Kumaran who had taken a keen interest during her classes. I guess I should have paid more attention those many years earlier when she was trying to teach. Even though I was unable to converse fluently with her I always felt an extraordinary attachment towards her which the words can not describe.

When I look back at her life I find there is so much to learn from it. She has been a great mother to all her sons who dearly loved her to the end; A loving grand mother to all of us who I am sure will become successful as our fathers whom Appamma brought up single handedly after Appappa’s death.

I thank God Almighty for the life of Appamma and the painless death she had

May her soul rest in peace

South Africa **Kohulan Shantikumar**

**என் அப்பம்மா**

ஒருவன் தானும் நன்கு வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கும் போது முழு மனிதனாகிறான். அந்த வகையில் அப்பம்மாவை நான் முழு மனிதனாகக் காண்கிறேன்.

அப்பம்மா மறைந்து ஒரு வருடமாகிறது. அவர் நினைவுகள் என்றும் எங்கள் மனதில் இருக்கும். நாங்கள் அக்கரைப்பற்றில் வசித்து வந்த காலத்தில் விடுமுறை நாட்களில் அப்பம்மாவைப் பார்க்க வருவோம். அங்கு விளையாட இடமில்லாமல் இருந்த எனக்கு இங்கு பெரிய வீடும் வளவும் விளையாட பெரிய சந்தோஷமாக இருக்கும். நாங்கள் வந்து நிற்கும் வேளையில் காலையில் அப்பம் சுட்டுத் தருவார். லோகி அக்கா, கவின் அண்ணா, பிரவின் அண்ணா எல்லோரும் வருவார்கள். சந்தோஷமாக விளையாடுவோம். பெரியப்பா, அப்பா, சித்தப்பா எல்லோரும் சிறு வயதில் விளையாடிய விளையாட்டுப் பொருட்களைக் கூட பத்திரமாக வைத்திருந்து நான் விளையாட எடுத்துத் தருவார். எனக்கு தபால்தலை சேகரிக்கும் பழக்கம் இருந்ததையறிந்து அண்ணாச்சிப் பெரியப்பாவின் புத்தகங்களை எடுத்துத் தந்தார். அத்துடன் அவரிடமிருந்த வெவ்வேறு நாடுகளின் நாணயங்களை எல்லாம் எனக்குத் தந்தார்.

ஒவ்வொரு வருடப் பிறப்புக்கும் நான் அப்பம்மாவின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கி கைவிசேஷம் பெறுவேன். மற்றவர்களை விடக் கூடுதலாகக் காசுகிடைக்கும் என்பகற்காகத் தான் நான் காலில் விழுவதாக எல்லோரும் கேலி செய்வதுண்டு. உண்டியலில் காசு நிரம்பியதும் எனக்குத் தருவார். Cross stitch அலங்காரம் செய்த தலையணையுறைகள் எனக்குத் தைத்து தந்திருக்கிறார். நான் மட்டுமே அவருக்கப் பக்கத்தில் இருந்த பேரன் என்பதனால் அவருக்கு யார் எதைக் கொடுத்தாலும் அதை எனக்கே தருவார்.

அப்பம்மாவுக்கு நோய் அதிகரித்து மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரிக்கு மாற்றுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்பு கூட அம்மாவிடமும் அப்பாவிடமும் என்னை நன்றாகப் பார்த்துக் கொள்ளும் படியும், படிக்கச் சொல்லி அதிகம் வற்புறுத்த வேண்டாமென்றும் கூறியிருக்கிறார். நான் வகுப்பு முடிந்து வந்து பார்க்கும் போது மயக்க நிலையிலிருந்தார். அதன் பின்னர் அவருக்கு நினைவு திரும்பவில்லை.

அப்பம்மாவின் நினைவுகள் மறக்கமுடியாதவை. அவர் எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்தாலும் மேலுலகிலிருந்து ஆசீர்வதித்துக் கொண்டிருப்பார்.

சிங்கப்பூர் **ராகுலன் யோகேஸ்வரன்**

## OUR APPAMMA

My appammma is the only grandparent that I have met because all the rest died before I was even born. When we visited her she always cooked my favourite meal and she took care of me, my brother and sister. She also talked to me and always gave us some sweets when we finished eating our lunch in Sri-Lanka. She always looked forward to seeing us and so did we. I really miss her now.

U.K. **Harry Surendran**

## My Appamma

My Appamma was very special to me. She was the only living grandparent on my father's side. She was caring and loving. She always let us stay in her house when we go to Sri Lanka.

I visited her three times. I could not remember the first trip but my parents told me that I sat on the parapet wall and fell down and it caused me to have a big bump on my head. I could remember the second trip a bit, I played cricket with Vimal Mama, Ragulan and some other friends. Even though I was not good at cricket, I enjoyed myself very much. Also I remember that Kumaran almost threw me into the well, but of course it was for fun.

During my third trip I had a chance to meet all my Periappas and cousins but my cousins Katpaham, Kumaran and Kohulan couldn't make it. I had a great time with my Periappas, Periammas , cousins and Appamma. Appamma was very happy to see all her sons and her grand children. I also had a great time in the portable pool with Aathithan,

Pradha and Meenachi. Amma told me that Appamma cooked her special *‘Appam’* for everyone, she started at 7o’clock morning and ended at 11.30 a.m. unfortunately, there was nothing left for her to eat. I think she loved all of us, and wanted us to be happy.

Appa told us lot of stories about appamma, especially of her strict discipline, kindness and her hard work to raise her sons. Amma also told that when ever Appamma visits us in Singapore she always took care of me and even fed me (we still have photos of Appama feeding me).

I am very thankful to Appamma for all her love and kindness she showed us over the years. Now we will never have the chance to re-live the happy moments with Appamma. I will never forget her.

I love you Appamma and may your soul rest in peace

Singapore **Sangkit Sathiyendra**

## என் அச்சாணி மச்சாளே .....

அமரருள் அமரராய் அமர அவசரமாய்
விரைந்தேகி மச்சாள் விண்ணுக்கு சென்றாயோ?
ஆண்டொன்று ஆகியும் ஆறாத்துயர் நெஞ்சில்
ஆழமாய் இருக்குதம்மா உங்களன்பு பிணைப்பாலே

பொங்கிவரும் உங்கள் சிரிப்பால் துன்பங்கள் மங்கிப் போகும்
வெம்பி வரும் வேளையிலே உங்களன்பு தாலாட்டும்
அன்றலர்ந்த தாமரையாய் விளங்குமுங்கள் திருமுகம்
ஆண்டு ஒன்றோடியும் கண்முன்னே நிற்குதம்மா

அன்புக்குப் பொருள் சொல்லி அரவணைக்கும் மச்சாளே
என்பெல்லாம் உருகுதம்மா உன்பிரிவால் இன்றும்
கண்மணிபோல் எமையெல்லாம் காத்த தெய்வமே
விண்ணோக்கிச் சென்றெம்மை ஏன் வருத்தி நின்றாயோ?

உள்ளம் உருகி வருந்துகின்றோம் இன்னும்
உங்களை நினைத்து வாடுகின்றோம் என்றும்
இன்னும் எம்முடன் இருக்கின்றீர்கள் என்றோர்
உள்ளுணர்வால் அமைதி கொள்ளுகின்றோம் மச்சாள்

விண்ணக வாழ்விலும் நட்சத்திரமாய்
ஒளிர வேண்டுமெனப் பிரார்த்திக்கும் மச்சாள்

கல்லடி **திருமதி. த. பசுபதி**

## என் உடன் பிறவா சகோதரி போன்றவரே!

எங்கோ பிறந்தோம் எப்படி வளர்ந்தோம் தெரியவில்லை .......

ஆனால் ஒன்றுக்குள் ஒன்றாக, சகோதரியாய் உலாவந்த நீங்கள் இன்று எம்மை விட்டு மண்ணோடு சங்கமித்து விட்டீர்கள்.

கண்ணுக்குள் தேங்கி நிற்கின்ற கண்ணீர் சகோதரி போன்ற மைத்துனியின் பிரிவைத் தாங்கமுடியாமல் கண்ணீர் அஞ்சலி செலுத்துவதை எப்படி நான் உங்களுக்கு எடுத்துரைப்பேன்?

காலங்கள் எத்தனை கடந்தாலும் உங்கள் பிரிவின் துயரத்தை மறக்கத்தான் முடியுமா? ஆனாலும் உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் உங்கள் நினைவால் கண்ணீர் அஞ்சலி செலுத்தும்

கொழும்பு **குந்தலா மாணிக்கம்**

## Remembering Aunty…

Most of my memories of my Aunty are from my childhood. My brother and I were always treated as one of their (Periyappa and Aunty) own children. Our two families shared a special bond, especially because not only was my mother and Aunty were sisters but my father and Periyappa were first cousins too. They had five children, all boys and as I was the only girl in both our families, I was always spoilt by them.

During my childhood we were living in Colombo and most of my school holidays were spent in Batticaloa at Periyappa and Aunty's home with their children.
After Periyappa's sudden death, our families became even closer. Aunty and her family shared our joys and sorrows, good times and bad as well as our fears and expectations.

After moving to Australia, I was fortunate to see her each time I went back to Sri Lanka to see my parents. I am also grateful that my children were able to meet her and spend time with her while they accompanied me on my visits home.
She was a caring, loving and pleasant person to be around and we will remember her forever.

Australia **Geetha Sathiamoorthy**

## காவியப் பெண்

இட்டுச் சிவந்தது இவள் கரம் இரண்டது
பட்டுச் சொரியுமாம் கணை மழை அவள்வாய் விலகும் சொல்
நட்டுச் செழித்தனவே அவள் செய்த நற்தானங்கள்
எட்டும் பரவச் சென்றதுவே அவள் ஈன்ற செல்வங்களே

இலட்சுமி குடிகொண்ட பேர் இலட்சுமியானள்
ஸரஸ்வதி நடம் புரியும் கூர் நாவைப் பூண்டு கொண்டாள்
துர்க்கைகண் அகலும் துணச்சல் ஓர் பல கொண்டாள்
கலங்கரை விளக்காக நம் ஊர் கல்லடியை ஆண்டு வந்தாள்

வழக்கறிஞர் மனையிலும் வழக்குரைத்த மனை அவள்
பிணக்கெழுந்த போதிலும் பின் வாங்கா புலிவேங்கைப் பூர்வீகம்
அணையா அடுப்பமைத்து அன்னதானம் பல செய்திடுவாள்
துணை இழந்த போது தன் பெருந்துணிவே தனித்துணை என்றாள்

வளை என்று வாழ்த்திடும் சகோதரர்தம் மோட்டுவளை
பிழை என்றுனைச் சாடிப் பிழைத்ததில் யார் உளர்
தழை என்று தந்திடும் தயாளரூபி, உன் மலை சாய்ந்த போது
குழை என்று குமரர் வாழ்த்த நிழல் தந்த சந்தரியே

மேலைப் புள்ளினம் கண்பனிப்ப நீட்டும் புகை இவள் அடுப்பு
மாளாச் சுனாமி உலைத்தார்ப்ப துடுப்போட்டும் இவள் துடுக்கு
தாளாச் செல்வம் அலைமேல்ச் சேர தானே வந்ததோ தனிமிடுக்கு
கோரச் சிக்குனி மீதமர்ந்து தன் வலம் சென்ற நாயகி அவள் எடுப்பு

வாழிய வாழிய அவ்வுலகிலும் வாழிய நம் காவியமே

## சின்னம்மா என்நினைவில் என்றும் மாறாதோர் சின்னமாம்

வாழ்ந்த போதிலும் மறைந்த போது பெயர் பெறும் மனிதருள்ளே வாழ்ந்த போதே காவியமானோர் கலைக்கூடத்தில் ஓர் ஓவியமாம் நம் சின்னம்மா.

நான் பேரபிமானம் கொண்ட சின்னம்மாவை ஒரு இரும்புப் பெண்ணாகவே முதலில் கண்டு கொண்டாலும் அதில் மறைந்திருந்த காருண்யத்தை பின்னரை புரிந்து கொண்டேன். எனது விவாதத் திறமைக்கு ஆரம்ப ஆசிரியை சின்னம்மா என்றால்

அது மிகையாகாது. சிறு வயதிலேயே அவருடன் நான் எதிர் வாதம் செய்த போது என்னைத் தட்டிக் கொடுத்தது வேறு யாரும் அல்ல, என்னில் பட்சம் கொண்டிருந்த மயில்வாகனம் சின்னப்பாவே. 'மற்றவர்களைப் போல் இவனையும் நினைத்து விடாதீர்கள்' என்று சான்றிதழ் தருவார்.அருள் அன்ரியின் ஆதரவும் வாகை மரம் தாண்டியபின் கிடைக்கும்.

சின்னம்மா வீட்டில் சூடு பறக்கப் பேச்சு முடியுமுன்னரே ஆவி பறக்க உபசாரம் நடக்கும்.அப்போது புரிந்து கொண்டேன் அவர் வீட்டில் அதிகரித்து வரும் விருந்தாளிகளின் ரகசியம் என்னவென்று. அந்த எழுசுவை வேண்டியோரில் நான் மட்டும் விதி விலக்கல்லவே.

என்னைக் கண்டவுடன் சின்னம்மாவின் வரவேற்பு "வியாபாரியார் வா, பெட்டியில் என்ன வைத்திருக்கிறாய்?" என்று கட்டியம் கூறியபடி தொடரும். நானும் சளைக்காமல் "அப்பா முதல் அம்மா வரை எல்லாம் கிடைக்கும்" என்பேன். நல்ல பதில் தருபவருக்குச் சன்மானமும் உண்டு. அழுது திரும்பியவர்கள் இதை அறிந்து கொள்ளவில்லை.அவர் சிரித்துக் கொண்டே " நீ பெரிய வியாபாரியடா. அவித்த சோளம் குசினியில் இருக்கிறது. வந்து சாப்பிடு" என்று அழைத்துச் செல்வார். இந்தத் தருணியின் எளிய கவிதைக்கும் நினைவுரைக்கும் கூட, பொருட் பிழை, சொற்பிழை, மற்றும் எதுகை மோனைக்காகக் குறைத்துக் கொண்டாலும் சன்மானம் தாராளமாகக் கிடைத்திருக்கும்.

எனது தாயார், சின்னம்மா செய்த அன்னதானங்களை நினைத்து அடிக்கடி சொல்லும் ஒரு வசனம்-"அன்னதானமிடுவதில் அப்பாவின் பிள்ளை சின்னம்மாதான் என்பதாகும். "சின்னம்மா வழி காட்டலோ என்னவோ உனக்கும் சமைத்துக் கொடுக்க வேண்டித் தோன்றுகிறது" என்று என் அம்மா சொல்வார்.

சின்னம்மா, குறிப்பிட்ட ஒரு சிலரை- பெயர் குறிப்பிடுவதானால் - விசேஷமாகப் பொன்னண்ணன் போன்றோரை- சாடுவது ஒரு கண் கொள்ளாக் காட்சியாயிருக்கும். பாடசாலை விட்டு வரும் வழியில் இவர்கள் சின்னம்மா வீட்டில் நிற்பது கண்டதும் நான் வலிந்து இறங்கி ஒரு பார்வையாளராகக் கலந்து கொள்வேன். அத்தனை சுவாரஸ்யமாக இருக்கும் அகப்பட்டுக் கொண்டவர் படும்பாடும், அவர்களுடன் சின்னம்மா கலைத்து உரையாடுவதும்.

இப்படியாக எனது சிறிய தாய்ப்பாசம் வளர்ந்து சென்றாலும் தன்மானம் களம் இறங்கித் தகராறு செய்வதைத் தடுக்க முடியவில்லை என்பது யதார்த்தமே.அப்படியான சந்தர்ப்பங்களில் முறுகல் நிலையை சுமுகமாக்குவதற்காக பனங்காய்ப் பலகாரம் தந்து என்னைச் சமாதானப் படுத்திய சந்தர்ப்பங்களும் உண்டு. வயிறு நிறைந்தும் பலகாரம் குறைக்காத முக இறுக்கத்தைப் புரிந்தோ என்னவோ, வீடு கொண்டு செல்ல பொட்டலமும் கட்டிக் கொடுப்பார்.

சின்னம்மா வீட்டு அப்பம் என்றால், நாங்கள் பசியுடன் காத்திருப்பதையும் மறந்து அப்பா வழியில் இறங்கி விடுவார். இப்படி நாவூற சமைத்துக் கொடுப்பதில் அவர் பெற்றதோ தனி இன்பம்.

சின்னம்மாவின் அடுத்த தானங்களில் ஒன்று கன்னிகாதானம் எனலாம். வயது வந்தவர்கட்கு வகைவகையாகக் கல்யாணங்கள் பேசி வாங்கியது என்னவோ வசைமாரி எனலாம். சின்னம்மாவின் இந்தப் பொழுது போக்கை 'அவர் இறங்கிக் கொண்ட வெந்நீரோடை'யாக நான் பிற்காலத்தில் உருவகித்துக் கொள்வேன். சின்னம்மா மற்றவர் நன்மை வேண்டியல்லாது வேறொன்றும் நினைத்து இந்த நல்ல தானத்தில் ஈடுபடுவதில்லை. ஒரு கல்யாணம் செய்து வைப்பது நூறு அன்ன தானம் செய்வதிலும் மேல் என்பதை அறிந்திருந்தாரோ என்னவோ, மற்றவர்களின் மாறான அபிப்பிராயங்களை என்னிடம் தெரிவித்து அவர் கவலைப்படும் போது நான் அவரிடம், "நீங்கள் செய்யும் புண்ணியம் உங்களைக் காக்கும்" என்று சமாதானம் சொல்வேன்.

அது எத்தனை உண்மையோ தெரியாது, ஆனால் சின்னம்மா செய்த புண்ணியங்கள் சின்னப்பாவின் தர்மங்களுடன் சேர்ந்து அவர்கள் தனயர்கள் பஞ்ச பாண்டவரை நல்மனையும் மற்றும் பதினைந்தும் கொடுத்துக் காத்தது என்னவோ ஓர் பேருண்மை என்பேன். இந்த நினைவு மலரில் குவியும் ஒவ்வொரு நினைவிதழும் இதற்குச் சசான்ற பகரும்.

இப்படி சின்னம்மாவிடம் வளர்ந்த அன்பு அவர் இழப்பில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. சினனம்மா என் நினைவில் ஓர் நீங்காத சின்னமானால் அவர் 2007 தையில் நிறைவு செய்த 84 ண்டும் பயணம் ஓர் காவியமன்றோ!

சின்னம்மா ஆத்மா சாந்தி அடைக!!

அவுஸ்திரேலியா **புருஷோத்தமன்**

# மாமியை நினைக்கையில்.......

என்னைப் பொறுத்தவரையில், நாம் இவ்வுலகில் பிறப்பதன் நோக்கம், தேவையான போது மற்றவர்களுக்கு அவசியமான தேவைகளை, எம்மால் முடியுமானவரை செய்து, மற்றவர்களின் வாழ்க்கையையும் சிறப்பித்து, அதன் மூலம் நமது வாழ்க்கைக்கும் ஓர் அர்த்தத்தை பெற்று செல்வதே ஆகும்.

இப்படியான ஒரு வாழ்க்கையை வாழ்ந்தவர் வரிசையில் என் மாமியும் ஒருவர். எனது தந்தை அடிக்கடி கூறிக்கொள்வது என்னவெனில் எனது அக்காதான் தனது குடும்பத்தின் மோட்டுவளை என்று. அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கையில் எனது மாமி, மிக சாதாரணமாக வாழ்ந்தாலும் அவரது சாதனைகளை யாரும் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. மட்டக்களப்பில் பெயர் போன அட்வகேட் மயில்வாகனம் மாமாவை, மாமி மணந்து கொண்டது மேலும் அவரின் வளர்ச்சிக்கு ஒத்தாசையாக இருந்தது. இன்று எங்களை எவ்விடத்திலும் யார் என்று பெருமையுடன் அறிமுகப்படுத்திக் கொள்ள எமக்கு மாமியின் உறவே வழிவகுத்தது.

மாமியின் சகோதர சகோதிரிகளின் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் சந்தோசமாக ஒன்றுகூடும் ஒரு இடமாக மாமியின் வீடே அமைந்திருந்தது. நாங்கள் சிறுபராயங்களில் கூடி இருக்கவும், விளையாடவும் எமக்கு எல்லோருக்கும் உகந்த சூழல் மட்டுமில்லாமல், வரவேற்பும் காணப்பட்ட இடமாகும். நாங்கள் எமது கடந்தகால வாழ்க்கையை எடுத்து நோக்கின் எங்கள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்டதும், குடும்பத்தினதும் முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் ஏணி போன்று காணப்பபட்டது மாமியின் குடும்பம் என்றே கூறவேண்டும். இதனை எம்மால் ஒருபோதும் மறந்துவிடமுடியாது.

எனது வாழ்கையை எடுத்து நோக்கின் நான் இன்று பொறியியலாளர் என்ற நிலைக்கு வர முக்கிய காரணமாக இருந்ததே எனது மாமியின் குடும்பம் தான். எனது வாழ்க்கையில் அதிக காலங்களை (கிட்டத்தட்ட 13 வருடங்கள்) மாமியின் குடும்பத்துடன் நான் கழித்திருநதேன்.

நான் எனது மாமியுடனான நாட்களை நினைக்கையில்...... எனது சிறுபராயங்களில் town என்று சொன்னால் ஞாபகம் இருப்பது மாமியின் வீடு தான். அங்கு நாங்கள் ஊரில் இருந்து வந்து நிற்போம். அந்நாட்களில் மாமியின் வீட்டு வெள்ளை மண்ணில் விளையாடுவது என்றால் எனக்கு அலாதிப் பிரியம்.

1974ம் ஆண்டு தை மாதம் நான் முதன் முதல் மாமி வீட்டுக்கு படிக்க வந்தேன். மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரியில் 5ம் வகுப்பில் சேர்ந்து கொண்டேன். அந்நாட்கள் மாமியின் வீட்டில் மிக சந்தோசமான காலங்கள், காலையில் பாடசாலைக்கு குட்டி, சுரேந்திரன் மாமி, மாமா உடன் காரில் பாடசாலை செல்வதும் மீண்டும் பின்னேரங்களில் காரில் பாடசாலையில் இருந்து வீட்டுக்கு வருவதும், வீடு வந்த பின் விளையாடுவதுமாக இருந்தது. சனி ஞாயிறு தினங்களில் வயலுக்கோ அல்லது வேறு எங்காவது எல்லோரும் காரில் செல்லும் அந்த நாட்கள் அந்த நினைவலைகள் என் நெஞ்சில் இன்னும் பசுமையாக இருக்கிறது.

எனது வீட்டை விட்டு புதிய இடத்தில் அம்மா அப்பா சகோதரங்களை பிரிந்த கவலை இருந்தாலும் மாமி வீட்டு சூழ்நிலை எல்லாவற்றையும் மறக்க வைத்தது.

இப்படியாக நான் மாமி வீட்டுக்கு வந்து ஒரு வருட காலம் உருண்டோடிய நிலையில் மயில்வாகனம் மாமாவின் பிரிவு எல்லோரையும் போன்று என்னையும் பாதித்திருந்தது. மாமாவின் மறைவுக்கு பின்பு மாமி தன் வாழ்க்கையில் பல கஸ்டங்களை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார். அந் நாட்களில் எனது தம்பி வாவாவும் படிப்பதற்காக மாமி வீட்டிற்கு வந்து சேர்ந்தார். தனது கஸ்டங்களுக்கு மத்தியிலும் எங்களை ஆதரித்து, தனது பிள்ளைகளைப் போன்று எமக்கும் எல்லா வழிகளிலும் உதவி செய்த எனது மாமியை என்னால் ஒரு நாளும் நான் மறக்கவே முடியாது.

சில வேளைகளில் மாமியை நினைக்கையில் சில நினைவுகள் என் நினைவுக்கு வரும். அன்றொருநாள் நானும் மாமியும் வயலுக்கு உரம் போடுவதற்காக, உன்னிச்சை வயலுக்கு அதிகாலை பஸ்சில் சென்றோம். அன்று முழுவதும் சாப்பாடு இல்லாமல் பிற்பகல் வரை அங்கு நின்று வேலையை முடித்து விட்டு வந்த அந்த திடமான மாமியை என்னால் மறக்க முடியாது.

பள்ளிக்கூடம் செல்லும் நாட்களில் அதிகாலை 4 மணிக்கு எழுந்து எங்களுக்கு காலை, மதிய உணவுகளை செய்துவைத்து காலை 7 மணிக்கு வெளிக்கிட்டு செல்லும் அந்த மாமியை என்னால் மறக்க முடியாது.

சூறாவளி அடித்து வீட்டில் ஓட்டுடன் under ceiling எல்லா பக்கத்திலும் இடிந்து விழுந்து கொண்டிருந்த போது, பசுபதியின் பிள்ளைகளாவது தப்பட்டும் என்று சொல்லி என்னையும் வாவாவையும் மண்டபத்து மேசையின் கீழ் போய் இருக்க சொன்ன அன்பான மாமியை என்னால் மறக்க முடியாது.

பாடசாலை விட்டு வீடு வந்து பின்னேரங்களில் எங்களுடன் சேர்ந்து ‘கரம்’ விளையாடிய மாமியை என்னால் மறக்க முடியாது.

வெள்ளிக்கிழமை இரவுகளில் வெளி குசினியில் இருந்து பிட்டு அவித்து எங்கள் எல்லோரையும் அழைத்து சுடச்சுட பிட்டு சாப்பிட தருவதையும் கடைசியாக சர்க்கரை புட்டுடன் சாப்பாட்டை முடித்து வைப்பதையும் என்னால் இன்றும் மறக்க முடியாது.

இவற்றையெல்லாம் விட சனி அல்லது ஞாயிறு தினங்களில மாமி வீட்டில் மதிய சாப்பாடு எப்படி போகும் என்று யாராலும் சொல்ல முடியாது. அன்று ஒரு நாள் மாமி வழமையாக சோறு ஆக்கும் பானையில் எங்களுக்காக சோறு ஆக்கினார். அன்று ஆட்டிறைச்சி கறி. பின் மதியம் சுரேந்திரனின் நண்பர்களும் எனது அப்பாவும் வர பின் அடுத்த சின்ன பானையில் சோறு போட்டு சாப்பிட்டுக்கு கொண்டிருக்கும் போது, வயல்காரனும் மனுசியும் வந்து சேர, இறுதியில் பாண் ஒரு இறாத்தல் வாங்கி வந்து மாமி சொதியுடன் சாப்பிட்டார். இது மாமி வீட்டீல் அடிக்கடி நடப்பதும், அதை சாதாரணமாக ஏற்றுக்கொண்டு போகும் பக்குவம் எனது மாமிக்கே உரியதாகும்.

இப்படியாக தன்னை அர்ப்பணித்து மற்றவர்களுக்கு உதவி செய்த மாமிக்கு அவரது கடைசி காலங்களில் என்னால் இயன்ற சிறு உதவிகளை செய்ய முடிந்தது எனது பாக்கியமே. மாமியின் பிறந்த நாட்களில் எனது குடும்பத்துடன் சென்று அவருக்கு பிறந்த நாள் கேக் கொடுத்து சந்தோஸப்படுத்த ஒரு சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது.

அவரின் மரணத்திற்கு முந்திய நாள் குஞ்சுத்தம்பி மாமிக்கு apple juice வாங்கிக் கொடுக்கச் சொல்லி அதை நானும் வாங்கிக் கொடுத்தேன், அதை மாமி கொஞ்சம் விரும்பிக் குடித்த போது இன்னும் கொஞ்சம் குடியுங்க மாமி என்று சொன்ன போது “எனக்கு முடிந்தால் சாவை மட்டும் வாங்கித்தா சரத்” என்று சொல்லி அடுத்த நாளே அதையும் பெற்றுக் கொண்டார் பாக்கியசாலியான என் மாமி.

எனது தாய்க்குச் சமனான ஒரு மாமியை தந்தமைக்கு என்றென்றும் ஆண்டவனுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன். என் உயிர் உள்ளவரை எனது மாமியின் நினைவலைகள் என்னைவிட்டு நீங்காது.

மட்டக்களப்பு **சரத்**

## வார்த்தைகளைத் தேடிக்கொண்டிருக்கிறேன்......

குட்டி மாமி இவ்வுலகை விட்டு மறைந்து ஓர் ஆண்டு நினைவு தினமான இன்று அவரைப் பற்றி எண்ணும் போது.....

நான் மிக நீண்ட காலமாக குட்டி மாமியின் அன்பிலும் அரவணைப்பிலும் அவருடைய வீட்டில் வளர்ந்த நாட்கள் என் மனத் திரையில் மின்னி மறைகின்றன. அந்த நினைவுக் கடலிலிருந்து ஒரு சில துளிகளையாவது உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் ஒரு களமாக இப்பக்கம் விரிகிறது.

துருப்பிடித்து இறுகிப் போன காலத்தின் சக்கரங்களை கடும் முயற்சி செய்து முடிந்த வரை பின் நோக்கிச் சுழற்றுகையில் .... 1970 களின் ஆரம்பமாக இருக்க வேண்டும். பாடசாலை விடுமுறை நாட்களில் நான் குட்டி மாமியின் வீட்டிற்கு வரும் வேளைகளில் குட்டி மாமாவின் முகமும் கொஞ்சம் கொஞ்சம் தோன்றி மறைகிறது. குட்டி மாமா- மாமி, பிள்ளைகளுடன் மாமாவின் காரில் மாமாங்கத் தீர்த்தக்கரை, கொக்கட்டிச் சோலைத் தேரோட்டம், உன்னிச்சை வயல் எனப் பல இடங்களுக்கும் சுற்றித் திரிந்த நாட்களில் குட்டி மாமியின் முகம் முதன்முதலாக, என் நினைவுக்கு கொஞ்சம் மங்கலாக ஆனால் இன்னும் பசுமையாக என் மனக்கண் முன் நிழலாடுகின்றது.

பின்னர் குட்டி மாமா மறைந்த போதும், அதைத் தொடர்ந்து நீண்ட காலமாகவும் குட்டி மாமியின் கண்ணீர் என் மனதிலும் சோகத்தை ஆழமாக விதைத்துச் சென்றதை நான் உணர்ந்தேன்.

1976ம் ஆண்டு முதல் ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக குட்டி மாமியுடன் அவர் வீட்டில் தங்கியிருந்து படித்த நாட்கள்..... அவரின் கண்டிப்புடன் கூடிய அன்பை நான் அனுபவித்த வேளைகள்......எப்போதும் “நன்றாகப் படிக்க வேண்டும் வாவா” என வற்புறுத்திக் கொண்டே இருப்பதும், ஏதாவது தவறு செய்தால் காரசாரமாகக் கண்டித்துவிட்டு, சற்று நேரத்தில் வந்து “உனது நன்மைக்காகத் தானே நான் சொல்வது எல்லாம்” என என்னை சாந்தப் படுத்துவதும் அவர் மேல் எனக்கு மிகுந்த ஈர்ப்பு எற்படக் காரணமாக அமைந்தன.

1978ம் ஆண்டு நவம்பர் 23ம் திகதி குட்டி மாமியின் உதவியுடன் மறுபிறவி எடுத்து வந்த இரவு.... ஆம் சூறாவளியின் கோரப் பிடியில் சிக்கி மரணத்தின் விளிம்புக்கே சென்ற எம்மை குட்டி மாமி பாதுகாத்த போது , ஒரு தாய்க் கோழி தன் குஞ்சுகளை ஆபத்துகளில் இருந்து காப்பாற்றியதைப் போன்ற உணர்வுதான் அவ்வேளை எனக்கு ஏற்பட்டது.
குட்டி மாமியின் மிகச் சிறந்த பண்புகளுள் ஒன்று என்னவென்றால், எத்தனைபேர் எந்த நேரத்தில் வீட்டுக்கு வந்தாலும், அன்பாக உரிமையுடன் அழைத்து உபசரித்து உணவளிப்பது. எவருக்கு என்ன பிரச்சினை என்றாலும் அவருடன் மனம் விட்டுப் பேசினால் சிறந்த ஆலோசனையும் கூறுவதுடன், தன்னால் எவ்வாறெல்லாம் உதவிட முடியுமோ அத்தனை வழியிலும் உதவிகள் புரிந்திடுவார்.

நாட்டின் இனப்பிரச்சினை காரணமாக நடைபெறும் சுற்றிவளைப்புகளின் போது, அநேகமாக எல்லா இளவயதினரையும் சந்தேகத்தின் பேரில விசாரணைக்காக கல்லடி இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்வது வழக்கம். அவ்வாறே என்னையும் முகாமிற்குக் அழைத்துச் செல்லும் போதெல்லாம் குட்டி மாமி பின்னாலேயே ஓடி வந்து என்னை விடுவிக்கும் வரை காத்திருந்து வீட்டுக்குக் கூட்டி வந்ததை என்னால் என்றுமே மறக்க முடியாது

பின்னாட்களில் நான் கண்டிக்குப் போவதற்கு முதல் நாள் இரவு எனக்குத் தேவையான பணம், பொருட்கள் எல்லாம் தந்துவிட்டு “எனக்குத் துணையாக இனி வாவாவும் இல்லையே” எனக் கலக்கத்துடன் கூறிய போது நானும் கலங்கலானேன். பின்னர் எனக்கு கண்டிக்கு அனுப்பிய கடிதத்தில் ‘என்றும் என் அன்பு மகனே’ என்று விளித்து, “இங்கு எனது பிள்ளைகள் எவரும் இல்லை. நீயும் என்றும் எனக்கு ஒரு பிள்ளைதான். எனவே நான் இறந்தால் நீதான் ஓடி வந்து எல்லாம் செய்ய வேண்டும்” என உருக்கமாக எழுதியிருந்ததை படித்து நானும் உருகலானேன்.

இறுதியாக கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் நாள் காலை நான் வவுனியாவில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது, குட்டி மாமியின் மரணச் செய்தியை அறிந்து கொண்ட கணத்தில், என்னையறியாமலே என் கண்கள் பனிக்க, சோகம் தாளாது இதயம் தள்ளாட, எனது உறுப்பகள் எல்லாம் செயலிழக்க, முழுமையாக ஸ்தம்பித்துப் போனேன். பின்னர் மிகுந்த பிரயத்தனத்தின் பயனாக என்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு, இனி எந்த விதத்திலும் கவலையை வெளிக் காட்டிக் கொள்ளக் கூடாது, அழவே கூடாது என வழிதோறும் எண்ணியவாறு வவுனியாவிலிருந்து வந்தேன் . ஆனால் அவர் உயிரற்ற உடலைக் கண்ட போது எனது உயிர் வேதனைத் தீயாக மாறி, உடலை உருக்கி உகுத்த நீர் கண்ணீராகி கண் வழியே சொரிய என்னையே என்னால் கட்டுடப்படுத்த முடியாமல் நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தேன்.

நான் வந்து இறங்கிய போது, என் தந்தையார் கூறியது போன்று எங்கள் குடும்பத்தின் ‘மோட்டுவளை’ போன்று வாழ்ந்து, எம்மெல்லோர்க்கும் எல்லாவற்றிலும் உதவியாயிருந்த, என்றென்றும் எங்கள் அன்புக்குப் பாத்திரமான குட்டி மாமியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். குட்டி மாமியின் அன்பையும், பண்பையும், பாசத்தையும் விளக்க வழி தெரியாது இன்னம் வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

வவுனியா **வாவா ( பிரேமசந்திரன்)**

## நினைவாஞ்சலி

திருமதி மயில்வாகனம் எனும் குட்டி மாமியுடன் எங்கள் சிறு வயதில் இருந்தே பழகியிருக்கின்றேன். அவர் நிறைய நற்பண்புகளுடன் இறுதி வரை வாழ்ந்தவர்.

நாங்கள் பாடசாலைக்குச் செல்லும் பருவத்தில் எங்கள் படிப்பில் மிகுந்த அக்கறையாகவும் கண்டிப்பாகவும் இருந்தவர். அந்த நேரங்களில் அவரை நெருங்க எனக்குப் பயமாக இருக்கும். எல்லோருக்கும் கல்வியை ஊக்குவிக்கும் நல்லெண்ணமும் விருந்தோம்பும் நற்பண்பும் அவருக்கே உரித்தானது. அவை மட்டுமன்றி அவருக்கு சமையல் கலையிலும் தையல் கலையிலும் நல்ல திறமையும் அவற்றில் எங்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் ஆற்றலும் இருந்தது. அதே சமயத்தில் நாங்கள் ஏதேனும் பிழை விடும் போது கண்டிக்கவும் தயங்க மாட்டார்.

இதற்குப் பிற்பட்ட காலங்களில் பல தூர இடங்களுக்குச் மாமி செல்லும் போது என்னையும் தன்னுடன் அழைத்துச் செல்வார். அவ்வாறு 1990ம் ஆண்டுகளில் ஒரு தடவை நாங்கள் கல்முனையிலிருந்து மட்டக்களப்பிற்குத் திரும்பிக் கொண்டிருந்த போது நாங்கள் பயணித்த வண்டி பெரும் தாக்குதலுக்கிடையே அகப்பட்டுக் கொண்டது. வண்டியில் பயணம் செய்த அனைவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினோம். எங்கள் பயணம் பாதியிலே தடைப்பட்டதால் நாங்களிருவரும் முன்பின் தெரியாத ஒருவர் வீட்டில் தஞ்சம் புகுந்தோம். மறுநாள் சின்னண்ணா எங்களைத் தேடி வந்து சந்திக்கும் வரை நான் மிகவும் பயந்திருந்தேன். ஆனால் மாமி மிகவும் தெளிவாகவும் துணிச்சலுடனும் செயற்பட்டார். அந்த அனுபவமும், அந்நேரம் மாமி காட்டிய துணிவும், எதுவித பதட்டமுமின்றி அவர் நடந்து கொண்ட விதமும் என்னால் என்றுமே மறக்க முடியாதவை.

சிறுவயதிலிருந்தே என்னையும் என் சகோதரர்களையும் தன் பிள்ளைகளைப் போன்று ஆதரித்த குட்டிமாமியின் பெரிய மனது என்னால் என்றும் மறக்க முடியாதது. அவரது இந்த நினைவு மலரில் அவரை நினைவு கூர சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு என் நன்றிகள்.

அவுஸ்திரேலியா **மேகலா கிருஷ்ணதேவா**

## என் குட்டி மாமி

குட்டி மாமி என்றவுடன் என் நினைவுக்கு வருவது இளமைக் காலத்தின் விடுமுறைக் காலங்கள் தான். ஒவ்வொரு விடுமுறையின் போதும் கொழும்பிலிருந்து மட்டுநகர் செல்வது எம் வழக்கம். அந்நாட்களில் குட்டி மாமி வீட்டில் நிற்பதிலுள்ள சந்தோஷம் எதிலுமில்லை. ரயிலில் இருந்து இறங்கிய நேரம் முதல் கொழும்பு வந்து சேரும் வரை குட்டி மாமியின் அன்பிலும் விருந்துபசாரத்திலும திக்குமுக்காடிப் போய் விடுவோம்.

மாமியைப் போல கைவந்த சமையல் கலை நிபுணர் யாருமில்லை. காலையில் அப்போது தான் இட்ட கோழியின் முட்டையில் சுட்ட அப்பம் முதல் சுடச்சுட அவிக்கும் பிட்டும் கத்தரிக்காய் கறியும் மறக்க முடியாதவை. சமைப்பதற்கு அதிக நேரம் எடுக்காவிடினும் அவரின் சமையல் மிகவும் சுவையாக இருக்கும். பலகாரம் செய்வதில் மாமி மிகவும் வல்லுனர். விதவிதமான பலகாரங்களை சித்திரை வருடப் பிறப்புக்கும், நத்தார், புத்தாண்டு தினங்களிலும் செய்து தருவார். மாமி வீட்டில் அண்ணன்மாரின் நண்பர்கள் முதற்கொண்டு வயலிலிருந்து வருபவர் வரை சமமான கவனிப்பும் விருந்துபசாரமும் நடக்கும். எல்லோருக்கும் முகமலர்ச்சியுடன் விருந்து பரிமாறுவார்.

மாமியுடன் வெளியே செல்வது எங்களுக்கு மிகவும் பிடிக்கும். பஸ்ஸில் போகும்போது பழைய கதைகள் எல்லாம் சொல்லிக்கொண்டு வருவார். முனைக்காட்டுக்கோ வயலுக்கோ போகும் போது தன் சிறுபிராயக் கதைகள், மாமாவை விரும்பிக் கல்யாணம் முடித்த கதைகள் எல்லாம் சொல்வார். பௌர்ணமி நாட்களில் கடற்கரைக்கு கூட்டிச் செல்வார். அல்லது வீட்டு முற்றத்தில் பாய் போட்டு பல கதைகளும் பேசுவார். மாமியின் வீடு எப்போதும் பலரும் கூடும் வீடாக இருக்கும்.

கண்டிப்பான மாமியாகவும், அன்பான நண்பியாகவும், அருமையான வழிகாட்டியாகவும் எனக்கு எப்போதும் இருந்த மாமியுடன் இத்தனை நாட்கள் சேர்ந்திருக்கக் கிடைத்தது நான் பெற்ற பாக்கியம் எனக் கருதுகிறேன். இனிய எங்கள் குட்டி மாமியை இழந்தது பேரதிர்ச்சியாக இருந்தாலும், நினைவை விட்டு அழியாத அவருடன் கழித்த அந்த இனிய நாட்களை அசை போட்டு மனதைத் தேற்றிக் கொள்கிறேன்.

இலண்டன் **தபோதினி சுரேஷ்**

## மாமியிடம் ஒரு செய்தி.....

இவ்வுலகில் மானிடப் பிறவி பூண்டு வாழும் மனிதர்களில் எத்தனை வகை! அவற்றுள் வெறுமனே வாழ்ந்து, இறப்பதற்காகவே பிறப்பெடுத்து வாழும் மனிதர்கள் தான் அதிகமாக இருந்து விட முடியும். அதுதான் இலகுவானதும் பயனற்றதுமான வாழ்க்கை முறை.

இப்படிப் பட்ட உலகில் ஒரு நன்மனிதரை மணமுடித்து ஐந்து ஆண்குழந்தைச் செல்வங்களை பெற்றெடுப்பது என்பதனை நீங்கள் இலகுவான வேலையாகக் கருத முடியும். இடை நடுவில் கணவனின் இழப்போடு அந்த ஐந்து குழந்தைச் செல்வங்களையும் தந்தையாக, தாயாக, பாதுகாவலனாக மொத்தத்தில் எல்லாமுமாக வளர்த்தெடுப்பதையும் கூட நீங்கள் இலகுவாகக் கருதி விட முடியும். ஆனல் அந்த ஐவரையுமே நற்குணங்கள், நல்லொழுக்கம், நல்லறிவு, நல்லாற்றல், நற்சிந்தனைகள் என சகல ஒரு நல்லவன் என இந்த உலகம் போற்றக் கூடிய அனைத்து குணாதிசயங்களையும் புகட்டி நன் மனிதர்களாக வளர்த்தெடுத்து காலாகாலத்திற்கும் அவர்களுக்கு உகந்த நல்வாழ்வாம் இல்லற வாழ்க்கையை உருவாக்கி இவ்வுலகத்திற்கு உவந்ததை எவரும் ஒரு இலகுவான வேலையாகக் கருத முடியுமோ? அவ்வாறு உவந்த அந்த உத்தமித் தாய் தான் எங்கள் மாமி.

எனது தாய்க்கு அடுத்த ஸ்தானத்தில் மதிக்கப்படக்கூடிய எனது அன்பு மாமியுடன் எவ்வளவு காலங்கள் அவருக்கு உதவியாக அந்த வீட்டில் அவருடன் வாழ்ந்திருப்பேன். எத்தனை சம்பவங்கள், எத்தனை நினைவுகள், எத்தனை அனுபவங்கள், எத்தனை படிப்பினைகள். அவை எல்லாமே இங்கு எழுத்துருவில் வடித்துவிட முடியாது.

எனது வாழ்க்கைக் காலத்தில் ஒரே ஒரு வருடம் எனது முதுமானிப் பட்டப் படிப்பிற்காக இங்கிலாந்து தேசம் சென்றிருந்த போது தான் அவரை நான் இழந்து விட்டேன். கடைசியாக அவரை நாங்கள் இழப்பதற்கு ஓரிரு நாட்களுக்கு முன் தான் என்னிடம் கூறினார், “இங்கு என்னதான் நடந்தாலும் சரி, உனது படிப்பை முடியாமல் திரும்பி விடாதே” என்று.

இன்று வெற்றிச் செய்தியுடன் நாடு திரும்பி மாமியைத் தேடுகிறேன். இன்னும் காணவில்லையே! இறைவனடியில் இரண்டறக் கலந்துவிட்ட எனது மாமியிடம் ஒரு செய்தி சொல்ல வேண்டுமே! திக்குத் தெரியாமல் திகைத்து நிற்கிறேன் நான்......

கல்லடி **பசுபதி விமலச்சந்திரன்**

## குட்டி மாமி

குட்டி மாமி என்றால் மட்டக்களப்பும் கல்லடி வீடும் தான் ஞாபகத்திற்கு வரும். அந்த நாட்களின் மலரும் நினைவுகள் என்றென்றும் பொக்கிஷங்களாய் என் மனதில் இருக்கும். தனது அருமைத்தம்பி மாணிக்கத்தின் மக்களை தன் மக்கள் போல் அரவணைத்து நடத்தியவர் எங்கள் குட்டி மாமி.. எனது முதலாவது சிறார் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்ததில் இருந்து எனது திருமணத்தின் போது தாலிக்குப் பொன் கொடுத்தது வரை என் வாழ்வின் பல கட்டங்களில் அவர் ஈடுபாடுடையவராக இருந்தார்.

1983ம் ஆண்டுக்கு முன்னால் என் கொழும்பு வாழ்க்கையின் போது பாடசாலை விடுதலையென்றால் குதூகலம் தான் . குட்டி மாமி வீட்டு முன்றிலிலும் அந்த அழகான வீட்டிலும் ஓடித்திரிந்து விளையாடுவது என்றால் எனக்குக் கொள்ளை ஆசை. இனிய புன்முறுவலுடன் வரவேற்று பலவிதமான ருசியான உணவு சமைத்துத் தருவதில் குட்டி மாமிக்கு ஈடு எவருமில்லை.

மட்டக்களப்பில் நாங்கள் வாழ்ந்த காலகட்டத்தில் (1983-1990), அவர் எனக்கு அன்பின் பிறப்பிடமாகவும் அப்பாவுக்கு ஒரு வழிகாட்டியாகவும் இருந்ததை என்றும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இக்கட்டான சமயங்களில் அவர் ஒரு ஊன்று கோல் போல் நின்று உதவி செய்த நாட்களை இன்று நன்றியுடன் நினைகூருகின்றேன்.

நான் பல்கலைக்கழகம் செல்வதற்கு முந்தைய இரு வருடங்களில் குட்டி மாமியின் பாதிப்பு என் வாழ்வில் அதிகமாக இருந்தது. இளைஞனாயிருந்த எனக்குஅவர்

கூறிய புத்திமதிகளும், தவறு செய்த போது கண்டித்து விட்டு பின் சமாதானப் படுத்தும் மனப் பாங்கும், வாழ்க்கை பிறர்க்கு பயனுள்ளதாக அமையவேண்டும் எனக் கற்றுத் தந்த வாழ்க்கையும் அவற்றில் குறிப்பிடத் தக்கவை.

எனது மருத்துவக் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்ட போது கவலைப் பட்டவர்களில் அவரும் ஒருவர். எனினும் 'அவன் கெட்டிக்காரன், எப்படியும் வாழ்வில் முன்னுக்கு வந்து விடுவான்' என உற்சாகப் படுத்தி, என்மீது நம்பிக்கை வைத்தவர். தன் நம்பிக்கை வீண் போகவில்லை என்பது தெரிந்து பின்னாட்களில் உளமகிழ்ந்தவர்.

நான் இலண்டனுக்கு இடம் பெயர்ந்து 12 வருடங்களில் அவருடன் அடிக்கடி தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வேன். அப்போதெல்லாம் பல புத்திமதிகள் சொல்வார். பெற்றோருக்கு நான் செய்ய வேண்டிய கடமைகளை ஞாபகப் படுத்துவார்.அவரைப் பல வருடங்களாக நேரில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டவேயில்லை. அவர் எம்மை விட்டுப் பிரிந்த செய்தி இடியா க வந்திறங்கியதும் என்ன செய்வதென்று தெரியாமல் யோசித்தேன். எனது மனைவியையும் மகனையும் அவர் உயிருடன் இருக்கும் போது அறிமுகப்படுத்தும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை எனினும் இறுதியாக முகதரிசனமேனும் கிடைக்க வேண்டுமென மனம் துடித்தது. அவரை அடக்கம் செய்வதற்கு சில மணி நேரத்திற்கு முன்பாக மட்டக்களப்பை அடைந்து அவருக்கு இறுதி மரியாதை செய்யும் பாக்கியம் கிடைத்தது என் அதிர்ஷ்டமே.

குட்டி மாமி என் வாழ்வில் விட்டுச் சென்ற வெற்றிடம் என்றென்றும் அவரை ஞாபகப் படுத்திக் கொண்டேயிருக்கும். அவரைப் பற்றிய அன்பு நினைவுகளை எனது உற்றார் உறவினருடன், குறிப்பாக அவரது மகன்களாகிய என் மைத்துனர்களுட ன் பகிர்ந்து கொள்வதில் மனநிறைவடைகிறேன்.

குட்டி மாமியின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

இலண்டன் **சஞ்சீவன் மாணிக்கம்**

# In Memory of my Mami

It is with great sadness that I write this brief note about late Mrs Mylvaganam.

Everybody knows that my Mami was a kind hearted lady in our family. Because of her encouragement in studies and kindness, we are in good positions today. From my childhood she had been advising me to do medicine. She was very happy when I entered medical faculty, and I still remember the day she came to my house to give me a send-off when I went to Jaffna for the first time.

I like my Mami very much because she treated everyone equally. It is very difficult to see a lady like Mami in this life. She will always be in my thoughts.

My best wishes and love go to her children, whose life will no longer be the same without their mother.

Singapore **Sasi Pasupathy**

## A Tribute to an Aunt

My memory of the first occasion when I first met my aunt was when she visited our home at Davidson Road, Colombo, as the new bride of my uncle Mylvaganam Mama. I remember as a young child going up when summoned rather shyly to meet them. I remember noticing her long black tresses which hung well down below her knees. I also have a recollection that she was wearing a sari of a brilliant green which complimented her fair complexion.

My uncle being the eldest brother of my mother's family was dear to us all. He was caring and generous and showed his love for us young nieces and nephews in his quiet and gentle way. We thought he was very special to us and I remember feeling a bit of tinge of uncertainty if things were going to be the same. Allying all our childish doubts they turned out to be the most loving and caring relatives.

My uncle and aunt never failed to visit us when ever they were in Colombo. Likewise when ever we visited Batticaloa we enjoyed their affection and hospitality.

My uncle Mylvaganam and my aunt were a truly devoted couple who took on the traditional role of the Tamil House-Holder caring for all who were near and dear, both relation and friend. Their home was open to all. My aunt was a gracious hostess who with unstinting generosity should care for her guests- a quality which they have passed on to their five wonderful sons.

All through the years of her marriage to my uncle she continued to teach which she did right through her retirement. She combined motherhood, household chores and career with even-handed skill shirking none.

My uncle's sudden demise no doubt left her in great shock and grief.  She stoically took on the duties of both mother and father to her young sons bringing them up guiding, educating and setting them up in life. Her five sons bear testimony to what she accomplished single handed.

She also continued to care for her extended family and friends. She lavished her kindness and concern to all who came in contact with.

It is now a year since she went to the Good Lord, her Maker. Her loss is no doubt is still great to both her family and friends and all who knew her.

" To live in the heart  we leave behind is not to die "

Colombo **Savundarambikai Kanapathypillai**

# The Ruminations of a Nephew

Time is like space occupied that one leaves to be filled with events and other people. As humans we are bestowed with a mind for social interaction and to organise into cohesive communities, large and small. The immediate community one grows up with of course is the family.

I feel honoured to be asked by the sons of Advocate Mylvaganam and Mrs Letchumi Mylvaganam to write a tribute. Many things flood my mind, all things good and reflective. They were one of my favourites and I always felt very close to them. I cannot recall any harsh words from them to us who were the children, always kind to everyone of us with no favouritism. It still rings in my ears my aunt's greetings. ' Eppady Oppi' ( How's Oppi ). This would be the greeting always and the last occasion was on my visit to Batticaloa in May 2005, sad occasion of my cousin Sivaram's Funeral.

My childhood was spent mainly in Colombo at Davidson Road attending school holidays were mainly spent at Peradennya campus and sometimes at my maternal ancestral home of Stanley house in Batticaloa. The trips to Batticaloa, brought me closer to my cousins and were memorable. I owe it to my aunt Maheswari who use to take me along with her with my cousins.

Stanley House is a large Colonial Bungalow on Lady Manning's Drive. This has a long Veranda and a large garden with a regulation Neem tree and two large trees with fragrant flowers called *'Mahilam'* trees in Tamil providing shade. Many an evening has been spent chatting under these trees on moonlit night. Across the road fronting the house of course is

the Lagoon with its fishermen at night with their lanterns catching prawns at night. There is always the sound of the lagoon water lapping on the shores sending one into a serene state unmatched. I have many a time on quiet nights tried to hear the singing fish and failed of course.

At the back of the house ran a small lane called Eliza lane from the lagoon, off Lady Manning's Drive to the main Market. There was a thatched fence offering privacy to the house with a small gate to the lane. Situated across is a house we call Chinna veedu (Small House). This was a smaller version of the larger house with it's spacious garden. This was originally the Dowry house of my grandparents, Advocate Tharmalingam and Beatrice Kanagammah.

One day in the latter half of the 1950s, having been bored at Stanley House, I decided to visit Chinna veedu. My mother's cousin called Sunderam and his family now occupied this house. There were children who were few years younger than me. I was greeted by a gentleman who was first puzzled but soon turned to delight on discovering who I was and I too was on discovering who he was, the 'estranged' elder brother of my mother. I had heard of my mother speak of him as they were very close to each other as children. These meetings are like one coming home after many years of being away in an alien country. These moments are imprinted in one's mind like a negative of a photograph to be recalled at will.

I was whisked away to his house for dinner on Trincomalee road in Batticaloa. That is the first and only time I have visited that house. Of course by this time I met my aunt Letchumi Mylvaganam and my little cousins Shanthikumar and Ravivarman. Another of my mother's cousin fondly called Udayar maama then met me, who was living together with his

small family in this house.  I had by this time of my life shown some interest in photography through my father. He decided to show me how to print a black and white picture in his quickly arranged darkroom in his sitting room. To this day that flush of excitement on seeing an image appearing in the developer fluid of his child, in the darkened room under the red light from a tungsten bulb covered with red crepe paper, still echoes in me whenever I do some printing myself. That was my first ever lesson in printing. I always did remind my late Uncle Udayar Maama on meeting him. Now I have traversed a long way in photography and many images with my Leicas and Hasselblads with great joy.

Then late at night my uncle drove me back to Stanley House and he decided to come in with me. This was his first visit back to his home after many years of estrangement. He walked out of his home many years ago to settle with his newfound love Letchumipillai, his wife now, leading to all kinds of upheaval not unlike a Chekhovian play. My grand mother and my aunt who is called ‘Baby’, still living in the same house, met him. They were all excited and started chatting away like long lost relations! That again made it a special day, as I had become the catalyst in a reunion of mother son and a sister.

Then years rolled on by and now the Mylvaganam family built a lovely house on the Kallady main road. This house was very striking as at that time in the early 1960s it was the only large house for some distance. It is a bungalow with a lot of open spaces making it cool in the evenings, to sit in the veranda and have long pleasant conversations. These were the best days for me in every way and now looking back it is also for the country though the dark clouds were gathering. It

was prosperity for Uncle’s family and more children arrived totalling to five.

Kallady was an important fixture as it was from there my maternal family originated and my other relatives lived close by. Much more can be said of the roaming and days spent lazing around and play.

When I look back at the time capsule postcolonial time, it is very much a reflection of what was going in the rest of the land to the Elite families. There was prosperity before the independent days followed by decadence that usually sets in almost in cycles in the history of many things. This happened in Stanley House leading to it’s own social dilemmas. Chekhov reminded me of this when many years later in England I was reading Uncle Vanya. People had to find a meaning and stability and move from edifices crumbling from within. My uncle found this in his dear wife Letchumipillai. He found love, stability and happiness after years of struggle after my grand father Tharmalingam’s death unexpectedly leaving a lot of financial and family burden.

They were very generous always and never to heard saying any harsh words about anyone. They were fond of us all children and never showed any favouritism towards any one child. We all felt each one of us was special.

During my days at the medical education, we fell into difficult times as my father had died and the estate was in testamentary leaving us no money available to live on. During these hard times my uncle helped us financially when he could and I recall his brother-in- law Manickam dropping in at Davidson Road with very welcome bags of rice.

During my visits to Kallady I recall my aunt will position herself in the evening, after having been teaching at Vincent's Girl's High School, at the small kitchen at the back in front of the fire. There will be long conversations of all sorts bringing jollity and life to the house. On the last occasion I chatted with her, she reminded me how she remembers me always asking questions non-stop. It was interesting to hear someone say something of yourself that one cannot see for oneself. That is the last thing I recall after my last visit in 2005, her sitting not far from that kitchen. She always grieved for her husband who passed away suddenly at relatively young age but always happy and smiling.

For me they were both special as they made me feel the same. I am sure everyone else who had been in contact with them would feel the same. I do also miss the food that my aunt was good at making. Batticaloa cooking is magic, needless to say.

The days when I used to go to Kallady and spend the evening watching and helping my uncle and his boys tending to the grape vines is no more. The walks by the Citronella trees he had planted by the fence to provide shade and listening to him lecture to me about balance of world power in an answer to my query on the needless Vietnam War are no more.

Here we are now in different countries away from Batticaloa all over the globe and some left this life.

'So too at death the world does not alter but comes to an end' - Wittgenstein. Tractus Logico – Philosophicus. (6.431)

U.K **Oppi**

# A Tribute to Mylvaganam Mami

Even though Mylvaganam Mami is in a better place, a place for her will always remain in my heart.
When I think about the time I spent with Mylvaganan Mami, I realise how privileged I was to have been in the presence of such an inspirational woman. She not only brought enlightenment to my life, but that of many others.

When my sister was accepted into her family as her eldest daughter-in-law, I too became part of their family. She was an admirable figure in my life as long as I recall. Having lost my own mother at a young age, Mylvaganan Mami's words of wisdom will be forever cherished.

Despite our affinity, out relationship became much more apparent in my somewhat later life during my stay in South Africa with my sister and her family. Mylvaganan Mami was also visiting them to spend time with her son and his family. Although my visit was short, the valuable lessons I learnt from Mylvaganan Mami have been of great guidance to me, and I have no doubt that they will continue to assist me. The memorable time we spent with her in Cape Town still remains fresh in my heart.

As the mother of five successful men, I could think of no one in a better position to convey beneficial advice on how to enhance and persevere through the overwhelming prospect of raising a young family.

I am sure the many people she had touched including my husband and I will commemorate Mylvaganan Mami. On behalf of my family and Manohara family I sincerely pay tribute to Mylvaganam Mami.
May she forever rest in peace.

Australia **Miru Mohanathas**

# A Tribute

Mylvaganam Maama and Mammi became close to my mother and us when my father suddenly died in 1972. They were both very helpful to my mother during that time. Maama used to bring fish and vegetables to my mother from the market, had chats with her and go home. Two years later we lost Mylvaganam Maama. It was a great loss for us. There after Mylvaganam Maami and her children were very supportive and helpful to us throughout our life. It so happened that she passed away just after three months my beloved mother passed away.

May her soul rest in peace.

U.K. **Dr.Meena Dharmaretnam**

## திருமதி மயில்வாகனம் இலட்சுமிப்பிள்ளை அவர்களின் நினைவலைகள்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுள்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் பொன்மொழிக்கிணங்க வாழ்ந்த அமரர் இலட்சுமிப்பிள்ளை தமது பெயருக்கேற்ப இலட்சுமி காட்சமாகப் பிரகாசித்து வாழ்ந்தார். இவர் ஆசிரியப் பணியை மேற்கொண்டு தொழில் செய்யும் காலங்களில் மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலையிலும் மிகச் சிறந்த ஆசிரியையாகக் கடமையாற்றியவர்.

அன்னாரின் மூன்றாவது மகன் எமது மகளைத் திருமணம் புரிந்தமையால் அவருக்கும் எனக்கும் மைத்துனி என்ற உறவு ஏற்பட்டது. அன்றிலிருந்து எங்களுக்குள் ஏற்பட்ட பாசத்தின் பிணைப்பும் அவரின் பண்பான பேச்சும் என் மனதை விட்டு அகலாது உள்ளது.

தொண்ணூறாம் ஆண்டில் நாட்டில் நடந்த பயங்கர நிகழ்வுகளைக் கண்ணுற்று பயந்து அஞ்சித் தளர்ந்த போது எனக்குத் தைரியம் கூறி எம் பயத்தைப் போக்கியவர், தன்னம்பிக்கையும் அஞ்சா நெஞ்சமும் உடைய இவ் உத்தமி.

அவரின் கணவர் இறந்த பிறகு தனிமரமாக நின்று தான் பெற்ற பிள்ளைகள் ஐவரையும் வளர்த்து, அவர்கள் உயர்தர பதவிகளை வகிப்பதற்கு உதவுமுகமாக கல்வி கற்பித்து, மற்றவர் மதிக்கும்படி வாழ வழி வகுத்தது அவரின் தாயன்பையும் தன்னம்பிக்கையையும் காட்டுகிறது.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மட்டுமல்லாது உடன் பிறப்புகளுடனும் அளவிறந்த பாசமும் பண்பும் கொண்டிருந்தவர். அவரின் அன்பான உள்ளத்தினாலும் பேச்சினாலும் , சிறந்த விருந்தோம்பலினாலும் அனைவரினதும் மதிப்பையும் பெற்றவர். பரோபகாரியாக விளங்கிய அமரர் இலட்சுமிப் பிள்ளை நிச்சயமாக ஒரு தெய்வீகச் சூழலுக்குச் சென்று பெண் தெய்வமாக வைக்கப்படுவார் என்பதில் ஐயமில்லை. அன்னாருக்கு என் கண்ணீர்த்துளிகளை அன்புக் காணிக்கையாகச் செலுத்துகிறேன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கல்லடி **திருமதி பிள்ளையம்மா செல்லப்பா**

## அம்மா.....

மாமி என்ற ஸ்தானத்தில் இருந்து தாய் என்ற தெய்வ நிலைக்கு வந்து விட்ட அம்மா,
காற்றில் நீங்கள் கலந்து வந்து இக் கடிதத்தை படித்தால் மனதுக்கோர் ஆறுதல்.....

உங்களை எனக்குப் பிடிக்கவில்லை.
முதல் தடவை உங்களைச் சந்தித்துப் பேசிய போது உங்களை எனக்குப் பிடிக்கவில்லை என்பது தான் உண்மை!

உங்களது பேச்சில்-
அதிகாரம் இருந்தது; அதட்டல் தொனித்தது; காரம் காந்திருந்தது; கர்வம் பொங்கியது; மமதை மறைந்திருந்தது.

ஒரு தாய், ஐந்து குழந்தைகளுக்குத் அன்னையாகி- இடை நடுவில் கணவனைக் காலன் கவர்ந்து விட – ஐவரையும் பொறுப்புடன் வளர்த்தெடுத்து – கல்வியூட்டி- ஆளாக்கி விட்ட பின் அவர்களில் ஒருவருக்கு வாழ்க்கைத் துணை தேடும் சந்தர்ப்பத்தில் –
வரன் கேட்டு வந்திருக்கும் பெண்ணின் சகோதரனிடம் முதன்முறை பேசும் பேச்சில்-
உங்களை விட கூடுதல் அதிகாரம் காட்டுவாள்; அதட்டல் போடுவாள்; பிடிவாதம் காட்டுவாள்;
காரமாகக் கதைப்பாள்; கர்வம் பொங்கி வழிவாள்; மமதை நிறைந்திருக்கும்,
என்பதும்
தனது மகனுக்கு சரியான வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும், பயமும் இத்தனைக்குள்ளும் ஒளிந்திருக்கும்
என்பதும்
எனது முதிர்ச்சி எனக்கு கற்றுத் தந்த பாடங்கள் மூலம் பின்பு விளங்கிக் கொண்டேன்.

உறவுப் பாலம் போடப்பட்ட பின்......
உங்கள் குணாதிசயங்கள்
எதிர்பார்த்ததற்கு நேர்மாறு.

உங்களிடம்-
அன்பு இருந்தது; என்னைச் சுற்றிய அனைவரைப் பற்றியும் விசாரிக்கும் பண்பு இருந்தது; பாசம் மிகுந்த அறிவுரை இருந்தது;ஆறுதல் சொல்லும் கனிவு இருந்தது; கருணை இருந்தது; எனது கவலைகளில் மூழ்கி எழும் மனப் பாங்கு இருந்தது.

இவை அனைத்தும் ஒரு தாய்க்குள்ள குணங்கள் அல்லவா?
இடைக்கிடை உங்களை வந்து சந்திப்பேன். அதில் பெரிய இடைவெளி ஏற்பட்டு விட்டால், எத்தனை நாள் நான் வரவில்லை என்று கணக்குப் பார்த்துச் சொல்வீர்கள்.
இப்போது உங்களைப் பார்க்காத நாட்களின் எண்ணிக்கை நீண்டு கொண்டே போகின்றது.
கணக்குப் பார்த்துச் சொல்ல நீங்கள் தான் இல்லை.

உங்கள் பேரக் குழந்தைகள் பற்றிப் பேசுவது உங்களுக்குப் பிடிக்கும்;
உங்கள் மைந்தர்களின் சிறுவயது செயல்கள் பற்றிச் சொல்வது பிடிக்கும்;
உங்கள் கணவருடன் கழித்த பொன்னாட்களை நினைத்துக் கதைப்பது பிடிக்கும்;
கெளுத்தி மீன் பிடிக்கும்; பனங்காய்ப் பலகாரம் பிடிக்கும்;

மற்றவர்களுக்குப் பாரம் கொடுக்காமல், படுக்கையில் வீழ்ந்து கிடக்காமல் கிடைக்கும் சாவு பிடிக்கும்.

பிடித்தவை எல்லாம் கிடைத்து விட்டது உங்களுக்கு.

எங்களுக்கோ ...... இன்னும் நீங்கள் எங்களுடன் இருந்திருக்கலாமே என்றுள்ளது.
கவிந்தினி என் காதுபட இருமுறை சொல்லி, அதில் ஒரு முறை கண் கலங்கியே விட்டாள்.
"கல்லடி அம்மா இல்லையே" என்று.

'இல்லையே' என்பதன் அர்த்தம், எங்களுக்கெல்லாம் நீங்கள் வேண்டும் என்பது தான்!

இரண்டு முறை வைத்திய சாலைக்குச் சென்று நலமுடன் வீடு திரும்பிய நீங்கள், மூன்றாவது தடவையும் அதே போலக் குணமாகித் திரும்புவீர்கள் என எதிர்பார்த்தோம்.
ஏமாற்றி விட்டீர்கள்!

இது தான் இப்போது உங்களிடம் எனக்குப் பிடிக்காமல் உள்ளது!!

மட்டக்களப்பு **இன்பராஜா**

## அடையட்டும் சாந்தி!

மலரென்ற குரலொன்று மறைந்துமே சென்று
மாதமும் பன்னிரண்டு ஆனது இன்று
மரணத்தை நினைப்பூட்டி சென்றாய் நீ எனக்கு
மச்சாளே உன் ஆத்மா அடையட்டும் சாந்தி!

குந்தியைப் போல்ஐந்து மைந்தரைப் பெற்றெடுத்தாய்
குமரிகள் இல்லையெனும் குறைகளை நீக்கிவிட்டார்
எவருக்கும் தலைநிமிர்ந்து பதில்சொல்வாய் நீயே
என் மச்சாள் உன் ஆன்மா அடையட்டும் சாந்தி!

முதுமையில் மரணம் முறையான மரணம்தான்
எதுவுமே நாமறியோம் இறைவனின் தீர்ப்பதனை
மதியினால் வென்று வாழ்க்கையில் நிமிர்ந்து நின்றாய்
மச்சாளே உன் ஆத்மா அடையட்டும் சாந்தி!!

காரைதீவு -1 **திருமதி காசிப்பிள்ளை**

## In Memory of our Aunty

It's almost a year since she departed from us but her memory will remain with us for ever. She was a great lady and I always admire her for what she did to her five boys and to my wife, who was like her own daughter. I knew her as a school teacher at Arasady School but never had the opportunity to move very closely with her until I got married. Since then she became very close to me and she always treat me as one of her own son.

After our marriage we were living away from Batticaloa and whenever we visited home we always paid a visit and spent some time with her. She knew that I am suffering from diabetic and she used to advise me to take care and advise me to take what ever the local treatments she used to take for her diabetic. She was very fond of my two children and my wife and they loved her too. Last time we saw her was in July last year and we spent some time in her room discussing all about the past and she was very happy and very healthy. I always play jokes with her and she used to smile and never take anything serious and will say "சத்திக்கு ஒரே பகிடிதான்".

When we heard that she got an attack of "Chickengunia" and after she recovered and came back home, we spoke to her over the phone and consoled her. It was a surprise when we heard that she had the heart attack and passed away. It was

really a sad day for my family and my wife decided to go to Batticaloa with Ravi and attend the funeral. She had a wonderful life with her husband and children and God has given her everything she needed.

May her soul attain Moksha and she will always be in our thoughts and in our hearts.
In loving memory,

Australia **Sathiamoorthy and children**

## என் நினைவலைகளில் இருந்து பெரியம்மாவைப் பற்றி சில துளிகள்............

எனது கல்யாண ஒப்பந்தத்தின் பின் தான் பெரியம்மாவை முதன் முதலில் அறிந்து கொண்டேன். பெரியம்மாவுடன் மிகையான நேரத்தை கழிக்காவிடினும், பெரியம்மாவை பற்றி எனது கணவர் கூறியவற்றை கேட்டுஇ இவ்வளவு பொறுமையான பெண்மணியா இவர் என வியந்திருக்கிறேன். பெரியம்மா, தன் கணவரை இழந்த நிலையிலும் ஒரு தாயாகயும் ஆசிரியையாகயும் தன் பிள்ளைகளை மட்டுமில்லாமல் தன் சகோதரங்களின் பிள்ளைகளையும் வழிநடத்தி நல்ல ஒரு நிலைக்கு உயர்த்தியமையை அறிந்ததில் இருந்து பெரியம்மாவில் தனி மரியாதையே ஏற்பட்டது.

பெரியம்மா என்றால் எளிமையான அழகிய தோற்றம், புன்சிரிப்பு, மற்றவர்களை வரவேற்று உபசரிக்கும் குணம் இவை தான் ஞாபகத்திற்கு வரும். பெரியம்மா தன்னை சுற்றியுள்ளவர்களை தன் பேச்சால் சந்தோ'ப்படுத்துவதுடன் எல்லோரையும் சந்தோ'ப்படுத்தும் வகையில் பல குடும்ப ஒன்று கூடல்களுக்கு முன்னோடியாக நின்று செயற்படுவார்.

பெரியம்மாவின் பிறந்தநாட்களுக்கு கேக் செய்யும் வாய்ப்பு எனக்கு எட்டியது. ஓவ்வொரு தடவையும் நான் கேக் கொண்டு போகும்போதும் அவருக்கு இனிப்புப் பண்டங்கள் உடல்நிலைக்கு கேடு என்றாலும் கேக்கை முகம்மலர ஏற்றுக்கொண்டு வெட்டி எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்பார்.

பெரியம்மாவுடன் பேசும் போது வயது போன ஒருவரிடம் பேசிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு ஏற்படாது, அந்த அளவுக்கு நகைச்சுவையாகவும் மற்றவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்புக் கொடுத்தும் பேசுவார்.

தன் குடும்பத்தினர் உற்றார் உறவினர்களை ஒன்று கூட்டி மகிழ்விக்கும் ஒரு பெண்மணியாக திகழ்ந்தவர் பெரியம்மா. என்னுடைய அப்பம்மாவும் இவரைப்போலவே தான் . இவ்வாறான பெண்மணிகளை எங்கள் சமுதாயத்தில் விரல்விட்டு எண்ணிவிடலாம்.

பெரியம்மா நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஒரு வருடகாலம் ஓடி விட்டாலும் உங்கள் புன்னகை புரியும் முகம் எம் மனதில் பசுமையாகவே இருக்கின்றது, என்றும் பசுமையாகவே இருக்கும்.

பெரியம்மா நீங்கள் என்னிடம் பகிர்ந்து கொண்ட உள்ளக் கிடக்கைகளில் இருந்து நீங்கள் உங்கள் கணவரை எவ்வளவு ஆழமாக நேசித்தீர்கள் என்பதை உணரக்கூடியதாக இருந்தது. என்னைப்பொறுத்தவரை உங்கள் இந்த நித்திய துயில் உங்களை உங்கள் கணவருடன் மீண்டும் இணைத்திருக்கிறது என நினைக்கிறேன்.

உங்கள் இழப்பு எங்களுக்கு அளப்பெரியது என்றாலும், இயற்கையின் நியதியை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதை நான் எனது தந்தையையும் சகோதரனையும் எனது சிறு பாராயத்தில் இழந்ததன் விளைவாக கற்றுக் கொண்ட விடயம்.

பெரியம்மா நீங்கள் எங்களிடத்தில் இல்லாவிட்டாலும் உங்கள் நற்குணங்கள் உங்கள் பிள்ளைகள் வாயிலாக இன்றும் வாழ்ந்து கொண்டேதான் இருக்கின்றன.

மட்டக்களப்பு **காயத்ரி சரத்சந்திரன்**

## உன்னால் விளங்குது எம் வாழ்வு

ஏர் நிலைத்த படுவான் கரையகத்தே
எழில் மிகுந்த முனைக்காட்டு ஊரில்
சீர் பொருந்து சீனிவாசகம் போடி
சின்னமுத்து இல்லத்தின் பேறதாக
ஊர் போற்ற பெற்றெடுத்த மக்களுள்ளே
உத்தமியாள் நீயும் உதித்ததோடு
சோர்வின்றி இளமைதனை இனிக்கச் செய்து
சுடர் எனவே படிப்படியாய் வளர்ந்தாயன்றோ

வாத்திமை தொழில் உனக்கு
வாய்த்த நற் பொருத்த மன்றோ
நேர்த்தியாய் வாழக் கல்வி
நெறி வாழ்க்கை வேண்டுமென்பாய்
ஏற்றியே உன் இன்றும் என்றும்
எத்தனை மாணாக்கர் காண்போம்
தேற்றியே நீ ஊக்குவித்தோர்
தெரிசனம் உன் காண்பாரென்றும்

குறை ஏதும் காணஒண்ணா
குற்றமில் குணங்களோடு
நிறையுடை பெண்ணாக
நீண்டதொரு காலம் வாழ்ந்து
இறை அவன் அழைப்பை ஏற்று
இவ்வுலகை நீத்தாயேனும்
மறைந்து நீ போனாயில்லை
மனங்களில் கோயில் கொண்டாய்

சின்னக்கா எங்கட்கெல்லாம்
சிறப்புடை வாழ்க்கை தந்து
இன்புற்றாய் இளையோரெமக்கு
இணை இலா துணைகள் செய்தாய்
முன்னைய எம் புண்ணியங்கள்
முத்ததாய் நீ கிடைத்தாய்
விண்ணகம் நீ சென்ற போதும்
விளங்குதே எம் வாழ்வு உன்னால்.

கல்லடி

**மகிழை மகேசன்**

# அமரர் இலட்சுமிப்பிள்ளை மயில்வாகனம்

தான்தோன்றீஸ்வரமும் தாந்தாமலையும் அமைந்து தேன் தமிழால் சைவம் தழைத்தோங்கும் பெருநிலம் கொக்கட்டிச்சோலை. இங்குவாழ் மக்களின் விருந்தோம்பல் பழக்கம், மட்டக்களப்புத் தமிழகத்தின் சிறப்பை உயர்த்தி நிற்கின்றது. கைக்குத்தரிசி, கட்டித்தயிர், மீன், இறைச்சி, தேன் என்பன இவர்களது விருந்தோம்பலுக்கு பரிமாற்றப்படும் உணவுகளாகும். மட்டக்களப்பின் கலை கலாச்சார பாரம்பரியங்கள் இன்றுவரை உயிரோடு இருப்பற்கு இம்மக்களே காரணமாகும். இத்தகு பேற்றினைக்கொண்ட பிரதேசத்தில் முனைக்காட்டுக் கிராம் தனிச்சிறப்புடையது. இது மக்கள் தொகை கூடியதாகவும் கல்வி பொருளாதாரம் வீரம் ஆகியவற்றின் விளைநிலமாகவும் மிளிர்கிறது.

இங்கே செல்வச்செழிப்புற்று விளங்கியது சீனிவாசகம் குடும்பமாகும். சீனிவாசகம், சின்னமுத்து தம்பதியினர்க்கு ஆறு குழந்தைகள் பிறந்தனர். இவர்களில் இலட்சுமிப்பிள்ளை மூன்றாவது பிள்ளையாவார். பெயருக்கு ஏற்றாற்போல் மகாலெட்சுமி போன்ற அழகுடையாள். கல்முனை ஜி.பி.எஸ் பாடசாலையில் கல்வி பெற்று மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

கிராமிய பெண்களுக்கே உரித்தான அடக்கம், நற்பண்பு, ஒழுக்கம், பேரழகு இவற்றின் வடிவமாக காட்சிதந்த இலட்சுமிப்பிள்ளை மீது மட்டக்களப்பில் பிரபல அப்புக்காத்தர் என அனைவராலும் அழைக்கப்பட்ட மயில்வாகனம் காதல் கொண்டார். ஆசிரியர் பயிற்சி முடிவடைந்தபின் முனைக்காடு பாடசாலையில் ஆசிரியராக இருந்தபோது எனது தந்தை நாகமணி விதானையாரின் துணையுடன் அவர்களது திருமணம் நிறைவேறியது. இத் திருமணம் பிரதேசவாதம், சாதிப்பிரிவு போன்றவற்றிற்கு முற்றுப்புள்ளி வைத்த திருமணமாகும்.

ஏறக்குறைய 25 வருடங்கள் தாய் தந்தை சகோதரங்களின் அரவணைப்பில் வாழ்ந்து, பிறந்த வீட்டிற்கும் பெற்றெடுத்த மண்ணிற்கும் பெருமை தேடித்தந்தவர், 1950இல் புகுந்த வீடு புறப்பட்டு மட்டக்களப்பிறகுச் சென்றார்.

ஆரம்ப காலங்களில் மட்டக்களப்பு தாண்டவன் வெளியில் சிலகாலம் வாழ்ந்து வந்த இவர்கள் பின்னர் கல்லடிக்கிராமத்தில் வசிக்கலாயினர். மயில்வாகனம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியினருக்கு ஐந்து ஆண் பிள்ளைகள் பிறந்தனர். ஐந்து பிள்ளைகளையும் கற்றவர் சபை முன்னே சான்றோர்களாக நிற்கும் தகைமைபெற்ற கல்விமான்களாக வளர்த்து ஆளாக்கினார்.

சட்டத்தொழில் புரிந்த கணவர் அறுபது காலப்பகுதியில் அரசியலில் கால்பதித்தார். இதே வருடம் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் சுயேட்சை அபேட்சகராக போட்டியிட்டார். குறைந்த வித்தியாசத்தில் தோல்வி கண்டாலும் கணவரின் வெற்றிக்காகப் பாடுபட்டார். கணவர் 1974ம் ஆண்டு இயற்கை மரணம் எய்தினார். 24 வருடம் திடீரென முடிவுறலாயிற்று. ஆயினும் குடும்பப் பொறுப்பை தன் தலைமீது கொண்டு பிள்ளைகளை வழி நடத்தி திருமண பந்தங்களில் இணைக்கும் பொறுப்பை செவ்வனே செய்தார். படுவான்கரையில் தன் பரம்பரைத் தொழிலான விவசாயம் மாடுவளர்த்தல் ஆகியவற்றையும் பேணிவந்தார்.

கணவர் பிரிந்த நாள் முதல் தனது அன்புத்தெய்வத்தின் நிழற்ப் படத்தைப் பூசையறையில் வைத்து தினமும் பூவைத்து அவரின் ஆசி பெற்ற பின்னே அன்றாடக் கருமங்களை நடத்தி வந்தார். சுமார் 32 வருடங்கள் விதவை வாழ்வு வாழ்ந்தார். தன் பிள்ளைகளுக்கு தாயாகி தந்தையாகி தன் கடமைகளைச் செய்த பெண்ணிற் பெருந்தகை, தனது 85வது வயதில் இவ்வுலகை விட்டு ஏகினார்! மீளாத்துயில் கொன்டார்.

மயில்வாகனம் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகள் இல்வாழ்வில் இணைவதற்கு துணைநின்றவர் என் தந்தை நாகமணி விதானையார் ஆவார். அவர் இக்குடும்பத்தின் ஆத்ம நண்பனும் கூட. அந்த நட்பிற்கு நன்றி தெரிவப்பது போல என்னை தங்கள் வீட்டிலேயே வளர்த்தார்கள். உள் வீட்டுப்பிள்ளையான என் திருமணம் கூட இதே வீட்டில்தான் நடந்தது.

யுத்த சூழ்நிலை காரணமாக படுவான்கரையில் வசதி படைத்த மக்கள் சிலர் 1990ம் ஆண்டு காலப்பகுதிக்குப் பின்பே எழுவான் கரைக்கு இடம் பெயர்ந்து வசிக்கின்றனர். சீனிவாசகம் குடும்பப் பிள்ளைகளோ ஐம்பது வருடங்களுக்கு முன்பே எழுவான் கரைக்கு வந்து வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்து தங்கள் குழந்தைகளை சான்றோர்களாக உருவாக்கியுள்ளனர். இதனால் படுவான்கரைக்கே பெருமை. இவர்களது வீடு படுவான்கரையில் அனேகருக்கு புகலிடமாகியுள்ளது. இந்த நன்றியின் வெளிப்பாடாக அமரர் இலட்சுமிப்பிள்ளை மயில்வாகனம் அவர்களின் இறுதி யாத்திரையின் போது அனேகரின் கண்கள் குளமாயிற்று.

எல்லாம் வல்ல தான்தோன்றும் ஈஸ்வரனின் பேரருளாள் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

கல்லடி **வாவா இன்பராஜா**

# திருமதி இ. மயில்வாகனம் அவர்களின் கடந்தகால நினைவுகள்

மட்டக்களப்பு நகரிலிருந்து பத்து மைல் தொலைவில் படுவான் கரைப்பிரதேசத்தில் முனைக்காடு எனும் அழகிய கிராமம் அமைந்துள்ளது. வயல் நிலங்களும் முக்கனிகளும் தயிர் பால் போன்றவையும் தாராளமாகக்கிடைக்கும் இயற்கை வளமுள்ள இக்கிராமத்திலே 1922ம் ஆண்டு ஆகஸ்ட் 13ந் திகதி திரு திருமதி சீனிவாசகம் ஆகியோருக்கு மூண்றாவது பிள்ளையாகப் பிறந்தவர்தான் திருமதி இலட்சுமிப்பிள்ளை மயில்வாகனம் ஆவார்.

திரு சி.சா.ஞானமுத்து ஆசிரியரவர்கள் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய முனைக்காடு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியைப் பயின்றார். இவருக்கு மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருந்தனர் இவரின் மூத்த சகோதரியான திருமதி சீதேவிப்பிள்ளை கந்தையா என்பவர் கல்வியில் காட்டிய ஆர்வத்தின் நிமிர்த்தம் திரு சி. சா ஞானமுத்து ஆசிரியரின் வேண்டுகோளுக்கு இணங்க திரு சீனிவாசகம் தனது மகளை Girls boarding school கல்முனை எனும் இடத்திற்கு கல்வி கற்பதற்காக அனுப்பி வைத்தார். அங்கு கற்கும் போதே அவர் கிறீஸ்தவளாக மாறி அங்கிருந்தே உடுவில் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கு தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியையாகி அதே பாடசாலைக்கு ஆசிரியையாகி நியமனம் பெற்றார். முனைக்காடு கிராமத்தின் முதலாவது பயிற்றப்பட்ட ஆசிரியை என்ற பெருமை இவரையே சாரும்.

1937ம் ஆண்டு தன் சகோதரியின் வழியைப் பின்பற்றி கல்முனை Girls boarding school க்கு திருமதி இலட்சுமிப்பிள்ளையும் கல்வியைத் தொடர்வதற்காகச் சென்றார். பெண்கள் கல்வி கற்பது பெருமளவில் ஏற்றுக்கொள்ளப்படாத அக் காலகட்டத்தில் ஞானமுத்து அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க திரு சீனிவாசகம் அவர்கள் தனது பெண் பிள்ளைகளை துணிவோடு கல்வி கற்பித்தமை பாராட்டத்தக்கதொன்றாகும். கல்முனையில் கல்வியை முடித்தபின்னர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கு சேர்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் தனது பயிற்சியை முடித்து வெளியேறினார். பயிற்சிக்கலாசாலையில் இருக்கும்போது சட்டத்தரணி மயில்வாகனத்திற்கும் இவருக்குமிடையில் காதல் மலர்ந்தது. பின்னர் திருமதி இலட்சுமிப்பிள்ளை் பயிற்றப்பட்ட ஆசிரியையாக முனைக்காடு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தனது முதல்

நியமனத்தை பெற்றார். அவ்வேளையில் தான் விரும்பியபடியே திரு மயில்வாகனம் என்பவரை கரம் பிடித்தார்.

பல ஆண்டுகள் முனைக்காடு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்வி கற்பித்த இவர் கிராம மக்கள் அனைவராலும் போற்றத்தக்க நல் அம்சங்களைக் கொண்டிருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. "தன்னைத் தாழ்த்துகின்றவன் உயர்த்தப்படுவான்" என்ற விவிலியக் கோட்பாட்டிற்கிணங்க இவர் சேவையாற்றி வந்தார். என்றால் மிகையாகாது அனைவரிடத்திலும் அன்பு, தன்னலமற்ற சேவை, ஏழைச்சிறார்களின் கல்வியில் அக்கறை, சக ஆசிரியர்களோடு நல்லுறவு, இவையெல்லாவற்றிற்கும் மேலாக இறையன்பு உடையவராகவும் செயற்பட்டார். முதலாந் தரத்தில் இவரிடம் கல்வி பயின்ற அநேகர் அவருடைய அன்பையும் சேவையையும் பாராட்டிப் பேசுவதை இன்றும் கேட்கக் கூடியதாக உள்ளது.

இவர் முனைக்காடு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் இருந்து மட்டக்களப்பு பாடசாலைக்கு மாற்றலாகி வந்து தனது சேவையைத்தொடர்ந்தார். தனது கணவருடனும் ஐந்து பிள்ளைகளுடனும் அடிக்கடி முனைக்காட்டுக் கிராமத்திற்கு வந்து அங்குள்ள உறவினர்களை சந்தித்து அவர்களுடன் தனது அன்பைப் பகிர்ந்து கொள்ளத் தவறியதில்லை. விசேடமாக எங்கள் குடும்பத்துடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்றிலும் பேடும் போன்று இவரது கணவர் அன்னாருடைய வழிகளிலெல்லாம் ஒத்துழைத்து இணைபிரியாத தம்பதியினராக சீவியகாலமெல்லாம் சந்தோஷமாக இருந்தனர். கணவருக்கு திடீரென மரணமேற்பட்ட வேளையிலும் அதையும் தாங்கிக்கொண்டு தனது பிள்ளைகளுடன் ஒரு நேர்த்தியான வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

தனது 84வது வயதில் இறைவனுக்குள் இளைப்பாறிய திருமதி இலட்சுமிப்பிள்ளை மயில்வாகனம் தனது இறுதிக்காலங்களிலும் வேதாகமத்தை வாசித்து ஜெபம் பண்ணத் தவறியதில்லை. உச்சித மோட்ச பட்டணத்தில் அவர் வாசம் செய்வார் என்பது எமது திடமான நம்பிக்கை.

அவரின் அன்பை என்றும் மறவாத நண்பி

மட்டக்களப்பு **திருமதி நவமணி சித்தாத்துசை பிள்ளைகள்**

# The sad and sudden exit of a Dear Friend

It was a sad day – the 1st of February 2006 – The unexpected sudden passing away of my dear friend Lakshmi Mylvaganam in Batticaloa, Sri-Lanka. Her exit from her earthly abode was a shock to all who were close to her. The appointed hour had come and she had to reach the Lord.

Ours was a friendship that lasted more than six decades. Lakshmi's late husband, late Mr Mylvaganam and my late husband were good friends during their bachelor days. Both of them along with Mr Myl's uncle and cousins lived in a boarding house in Colombo. They enjoyed their bachelor days in good company.

Lakshmi had a happy marriage. "Marriages are made in heaven" – How aptly true! Myl and Lakshmi were united in the bond of holy matrimony. Myl was a lawyer of repute at the Batticaloa Bar and Lakshmi joined the teaching profession. They were a devoted loving couple enjoying every moment of their lives with happiness. They were blessed with five sons who are all doing well in different walks of life.

We were living in Peradeniya at the time of their marriage. After their wedding they spent a week with us at the Lecturer's Quarters. My husband was working at the University scheme, Peradeniya. Our quarters were below the Marrs Hall. The couple would go for walks and enjoy the scenic beauty of the hill country. They were fond of children and enjoyed the company of our one year old son, Ravi.

Lakshmi and Myl were simple folks who were down to earth. The wealth and fame had not spoilt them. They were generous hearted and helped the needy. During the school holidays they would come to Colombo and spend days with

us enjoying their stay when they were living in the Bambalapitiya Flats. The sea beach close by was an attraction for the children.

We too would go to Batticaloa during the school vacation. Lakshmi would tempt our appetite with tasty dishes. Batti is famous for its sea food and cadju. She would treat us with sugared cadju nuts which she prepared. Her hospitality knew no bounds for she was always ready to give of her best.

In 1974, during his last visit to Colombo, Myl insisted that we should come to Batticaloa for the school holidays. We left for Batticaloa during Christmas vacation in high hopes of having an enjoyable holiday. When we arrived at the Batticaloa Railway Station, we looked around for Myl but he was not to be seen. Instead a nephew of his came towards us and broke the sad news of Myl's passing away just a few hours before. We were shocked and speechless. How uncertain the life is! We were driven straight to his house and saw him lying in state. Lakshmi burst into tears and started screaming. Words are poor comforters and there was no way we could console her. She had lost her life's partner forever.

The sudden exit of her beloved husband created a void which could never be filled. She could not get over the loss. She was left helpless with a young family. God gave her the mental strength to discharge her parental duties with her deep sorrows concealed in the innermost recesses of her aching heart. Even Father Time could not help her, for so intense was her sorrow. He was her "நடமாடும் கண் கண்ட தெய்வம்". She has now joined him in Heaven and will be at peace.

Lakshmi was a good seamstress and good at embroidery. Lakshmi enjoyed sewing beautiful frocks for little girls. God had blessed her with five daughters-in- law who came into her family and were all fond of her. She will be missed by her

sons and families, and her brothers and sisters. She was the guiding force for the family.

Although we were far a part, we never failed to be in contact with each other. Letter writing was our mode of communication. If I failed to write she would pull me up for indifference. She was a sincere friend.

May her soul rest in peace.

Australia **Mrs Nageswari Nadaraja**

**எம்மை விட்டு மறைந்த திருமதி மயில்வாகனம் இலட்சுமிப்பிள்ளை அவர்களின் பிரிவையிட்டு என் நெஞ்சம் நிறைந்த நினைவுகள்**

பேராதனைப் பல்கலைக் கழக விடயமாக மற்ற மாணவர்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. இனக்கலவர நேரம் என்றபடியால் நானும் எனது மகளுடன் கல்லடிக்குச் சென்றேன். எப்படி உள்ளே செல்வது என்று யோசித்துக் கொண்டிருந்த போது முன் பக்கம் வந்த வீட்டுத் தலைவி ''யார், ஏன் நிற்கிறீர்கள்?'' என்று கேட்டு முன் கேற்றைத் திறந்தார். பார்த்தவுடனே ஒரு கம்பீரம், உயர்ந்த சிவந்த அழகான உருவம்! பேசாமல் நின்றேன். கண்ட ஞாபகம், இவர் ஒரு ஆசிரியர். ஆனால பேசிப் பழக்கமில்லை. மகள் விடயத்தைக் கூறினார். ''எழில் அல்லவா, உள்ளே வாருங்கள்'' என அழைத்துச் சென்றார்.

92ம் ஆண்டுக் கடைசியில் கடைசி மகன் குட்டியிடம் '' லீலா என் வீட்டுக்கு வர வேண்டும்'' எனக் கூறியிருந்தார். நான் தனியே சென்றேன். வீட்டுக் கதவு பூட்டியிருந்ததால் அழைப்பு மணியை அடித்த போது, கதவைத் திறந்தவ, பார்த்துக் கொண்டே, கொஞ்ச நேரம் நின்றா. ''ஏன் நிற்கிறாய் லீலா? நீ இப்படி தூக்க முடியாத சாமான்களுடன் வருவாய் என்று நினைக்கவில்லையே'' என்று தோளில் கை வைத்து அழைத்துச் சென்றதை மறக்க முடியாமல் நினைத்துப் பார்க்கிறேன். வெளிக்கிட்டால் ''நின்று போ லீலா'' என்று அடம் பிடிப்பீர்களே, கேற்றில் வந்து நின்று பஸ் ஏறும் வரை பார்த்துக் கொண்டு நிற்பீர்களே, எப்படி மறப்பது?

நான் கடைசி முறை வந்த போது போகவிடாமல் நாளை தான் போவது என்று மறித்தீர்கள். ஒரு மாதம் முடிய சென்றீர்களே, அந்த அழகிய முகத்தை எப்போது காண்பது?

"இன்றிருப்போர் நாளையில்லை
நிலையில்லாத உலகமிது"

காரைதீவு

**திருமதி லீலாவதி கந்தையா**
ஓய்வு பெற்ற ஆசிரியை

## My Adopted Mother

It was 1978. I was working as an Irrigation Engineer, Pankulam, and I applied for a transfer to go to Batticaloa. Colleagues in the Irrigation Department wondered as to why I was interested in going to Batticaloa when I was from Colombo and when I was also due to go to the Department's head office in Colombo for my design experience. My reason was different. I was taken up by the hospitality of the Batticaloa citizens which I enjoyed during two of my previous visits: once when I made a social visit to my adopted mother's house and the other when I volunteered to work for a week in a village after the cyclone in 1978 which damaged the entire Eastern Province. Further, I also wanted to find out as to why others were reluctant to go there.

Having no relatives in Batticaloa, Mrs. Mylavaganam graciously accepted me as one among her family. She hosted me during my entire stay in Batticaloa. She was always up very early, preparing lunch for me so that I could carry it to my work site in Mundankumaraweli. Only a mother would do it. How can I forget her spending almost an entire day preparing yogurt for my father's Anthireddy (31st day after a person's death). Even after leaving Batticaloa, I tried to

return once a month to spend time with her until I left to Nigeria.

Our relationship did not end once I went to Nigeria. She still corresponded and of course she attended our international wedding at Kattukudipatti in Ramanad District, Tamil Nadu. In fact, she was instrumental in helping me to get married to Muthumanimoli. Would any one else except a mother be keen in getting her son married? As I was single during my stay, our after dinner discussions centered at my future partner. She always teased me when I told her that my choice would be a person strong enough to withstand any calamity. I miss the relaxed atmosphere.

Finally, I feel rather guilty of not visiting her during my visit to Sri Lanka in 2005, but she is always cherished. Although we miss her now, it is temporary because we will be joining her shortly.

U.S.A. **K. Sivakumaran**

## A TRIBUTE

It was in mid April, 1965, that I first came to know late Mr. Mylvaganam Advocate, when I started my practice in the Kalmunai Courts. He was an eminent Civil Lawyer there at that time.

Though he was born in the lap of luxury, was provided the best of education, had obtained a Honours Degree from the London University, which was rare in the fifties, had passed out as an Advocate with honours and was a leading lawyer, yet he preferred simple way of life live like a common man.

Soon after my marriage in May, 1968, my wife and I were very close to them and we were treated like members of their family.

